
# திருக்கோயில்



ஆகஸ்ட்
2001

விலை
ரூபாய் ஐந்து



மயிலை அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் 17-7-2001 அன்று மாண்புமிகு இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசுவாமி அவர்கள் ''புத்தொளிப் பயிற்சி வகுப்பு''களைத் துவக்கி வைத்தார்கள். இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை இணை ஆணையாளர் (தலைமையிடம்) திருமிகு ப. தனபால் எம்.ஏ.பி.எல். அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். சென்னை இணை ஆணையாளர் திருமிகு இரா. சுப்பிரமணியன் பி.ஏ.பி.எல். அவர்களும், மயிலை அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் உதவி ஆணையாளர் - நிர்வாக அதிகாரி திருமிகு அ. சுப்பிரமணியன் எம்.ஏ., பி.எல். அவர்களும் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்கள்.



# திருக்கோயில்

திங்கள் இதழ்




| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ. 5.00 |
| ஆண்டு உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 60.00 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 500.00 |

| | | | |
|---|---|---|---|
| மாலை 43 | திருவள்ளுவர் ஆண்டு 2033 | விசு - ஆடி ஆகஸ்ட் 2001 | மணி 8 |



சிறப்பாசிரியர்

**திருமிகு த.ரா. சீனிவாசன் இ.ஆ.ப.**

சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்

ஆசிரியர்

**முனைவர் த. அமிர்தலிங்கம்,** எம்.ஏ., பி.எச்.டி.

''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்

**திரு எஸ். கனகய்யா,** பி.எஸ்.சி., பிஎல்.

கூடுதல் ஆணையாளர்

**திரு ப. தனபால்,** எம்.ஏ., பி.எல்.

இணை ஆணையாளர், தலைமை இடம்

ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

**திரு கே.கே. இராஜா,** எம்.ஏ., பி.எல்.

இணை ஆணையாளர் - செயல் அலுவலர்

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி

திருக்கோயில், பழநி.


முகப்பு

**திருவேற்காடு**

**அருள்மிகு தேவி கருமாரி அம்மன்**

## பொருளடக்கம்


மாண்புமிகு இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் அவர்கள் நடத்திய அறநிலையத்துறை சீராய்வுக் கூட்டம்

கண்கண்ட தெய்வம் கருமாரி - கி. நளினி பி.ஏ. அரசு இணைச் செயலாளர், சுகாதாரத்துறை

வா மழையே வா - துரை. நாச்சிமுத்து

கலங்காமல் காத்த விநாயகர் - விசாகன்

திருநந்திதேவர் - திருமதி மீனாட்சி கோகுலவாசன்

ஆன்மாவின் விடுதலை - மயிலை சிவசக்தி அம்மையார்

பார்க்கும் கண்ணில் பரமன் - டாக்டர் சிவப்பிரியா

முருகா அருள்வாய் - தத்துவக் கவிஞர் முருகுவண்ணன்

கந்தர் அனுபூதி - திருப்புகழ் மாமணி மு. அருணகிரி

பொய்கை ஆழ்வார் கண்ட திருமால் - கூடல் குகசீலரூபன்

உலகம் இங்கே சொர்க்கம் ஆகும் - கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்

தட்சிணாமூர்த்தி திருவருட்பா – விரிவுரை - பருத்தியூர் டாக்டர் சந்தானராமன்

மனிதரில் மனிதனைப் பார் - சிறுகதைச் சித்தர் ஏ.வி. ராஜகோபால்



உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :

உயர்திரு ஆணையாளர் அவர்கள்

***திருக்கோயில்***

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

*119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.*

தொலைபேசி : *8279407*

# மாண்புமிகு இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் அவர்கள் நடத்திய சீராய்வுக் கூட்டம்

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் ஆணைப்படி, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை தலைமையிடம் ஆணையர் அலுவலகத்தில் 30.7.2001 அன்று மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்களின் தலைமையில் சீராய்வுக் கூட்டம் நடைபெற்றது.

முன்னதாக மாண்புமிகு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் அவர்கள் புதிதாக தொடங்கப்பட்டுள்ள கணினி அறையைத் திறந்து வைத்தார்கள்.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் அரசுச் செயலாளர் திருமிகு பி.ஏ. இராமையா இ.ஆப., அறநிலையத் துறையின் சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு த.இரா. சீனிவாசன், இ.ஆ.ப., கூடுதல் ஆணையாளர் திருமிகு எஸ். கங்கையா பி.எஸ்சி., பி.எல்., தலைமையிட இணை ஆணை யாளர் திருமிகு ப. தனபால் எம்.ஏ., பி.எல்., ஆகியோரும், இந்து சமய அறநிலையத் துறையின் மண்டல இணை ஆணையாளர்களும் இணை ஆணையாளர் - செயல் அலுவலர்களும், துணை ஆணையாளர் - செயல் அலுவலர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

தமிழகத்தின் அனைத்துத் திருக்கோயில்களிலும் பூசைகள் சிறப்புற நடைபெற ஆவன செய்யப்பட வேண்டும் என்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆணைப்படி, நலிவுற்ற திருக்கோயில்கள் அனைத்திலும் ஒருகால பூசைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் இக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

பழமையான திருக்கோயில்களுக்கு மூன்று ஆண்டுக் காலத்திற்குள் திருப்பணி செய்து திருக்குட நீராட்டு விழா நிகழ்த்திட மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் இக்கூட்டத்தில் வலியுறுத்தி னார்கள்.

அனைத்து திருக்கோயில்களிலும் வருகை தரும் பக்தர்களுக்குச் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி மற்றும் நவீன கழிப்பிட வசதி செய்துதர விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள இணை ஆணையாளரிடம் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் வலியுறுத்தி னார்கள்.

அனைத்துத் திருக்கோயில்களில் திருக்குளங்களையும் பழுதுபார்த்துச் செப்பனிட அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் வலியுறுத்தி னார்கள்.

திருக்கோயில்களின் திருத்தேர்கள் பழுது பட்டிருந்தால் விரைந்து பழுதுபார்த்து திருத்தேர் விழாக்களை நிகழ்த்த வேண்டுமென மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

சேலம் மாவட்டம் தாரமங்கலம் அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலுக்குச் சொந்தமான அழகிய சிற்ப வேலைப்பாடுகள் மிக்க திருத்தேர் அண்மையில் சமூக விரோதிகள் சிலரால் தீக்கிரையாக்கப்பட்டது. அத்தேரினை முற்றிலும் புதியதாக உருவாக்கிட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ''திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப் பணி நிதியிலிருந்து'' ரூபாய் 25 இலட்சம் வழங்கியிருப்பதாகவும், அத்தேர் விரைந்து உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் மாண்பு மிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தகவல் தெரிவித்தார்கள்.

மேலும் இணை ஆணையாளர்களை மண்டலம் தோறும் புத்தொளிப் பயிற்சி வகுப்புகளை நிகழ்த்தி அர்ச்சகர்கள் - பட்டாச்சாரியார்கள், திருக்கோயில் ஓதுவாமூர்த்திகளுக்குத் தக்க விளக்கங்கள் வழங்கவும் ஆவன செய்ய மாண்புமிகு அறநிலையத்தறை அமைச்சர் அவர்கள் இக்கூட்டத்தில் வலியுறுத்தினார்கள். ●

# கண்கண்ட தெய்வம் கருமாரி

- கி. நளினி., பி.ஏ. அரசு இணைச்செயலாளர், சுகாதாரத்துறை,

திருவேற்காட்டில் கோயில் கொண்டு அருள் புரியும் கண்கண்ட தெய்வமாம் அன்னை கருமாரியின் அருட்புகழை எடுத்துக்கூறுதல் யாருக்கும் எளிய செயல் அன்று.

'கண்டாலும் பிணிநீங்கும் நிதிபெருகும் கலைஓங்கும்
ஞானம் உறும் கருத்துணர்ந்து
விண்டாலும் வானாட்கள் மிகப்பெருகும்
வீரமுறும் வேதை தீரும்
பண்டாலின் கீழ்அமரும் பரமன்அருள் சிறப்புற்றுப்
பரஞானப் பதம்அளிக்கும்
மண்டலத்தில் தேவி கருமாரியளின் புராணச்சீர்
எவராலும் மொழியொணாதே''

என்று அன்னை கருமாரியின் பெருமையைத் தேவி கருமாரி யம்மன் புராரணம் சிறப்புறப் பாடியிருக்கக் காணு கின்றோம்.

கரு எனில் மூலம் என்பதாகப் பொருள்; தெய்வசக்திகள் அனைத்திற்கும் மூலாதாரமாகத் திகழும் பராசக்தியே திருவேற்காட்டில் திருக்கோயில் கொண் டருளிப் பக்தர்களின் தீராவினைகள் யாவும் தீர்த்தருளி சகலசௌபாக்கியங்களும் தந்தருளும் தேவிகருமாரி ஆவாள்.

க என்பது பிரமனையும்
ரு என்பது ருத்திரனையும்
மா என்பது திருமாலையும் குறிக்கும்.

பிரமன், ருத்திரன், திருமால் ஆகிய மும் மூர்த்திகளும் போற்றும் பராசக்தியே தேவி கருமாரி ஆவாள்.

'கமலாலயனும்,
மதியுறுவேணி மகிழ்நனும்,
மாலும் வணங்கி என்றும்
துதியுறு சேவடியாய்''

என்று 'அபிராமி அந்தாதி' போற்றும் பாடல் மும்மூர்த்திகளின் ஆதாரசக்தியே தேவிகருமாரி என் பதைத் தெளிவுபடுத்துகின்றது.

புவனங்கள் பதினான்கையும் படைப்பவள், காப்பவள், மறைப்பவள் தேவிகருமாரியே.

'பூத்தவளே! புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே! பின்கரந்தவளே! கறைக் கண்டனுக்கு
மூத்தவளே! என்றும் மூவா முகுந்தற்கு
இளையவளே
மாத்தவளே! உன்னை யன்றி மற்றோர் தெய்வம்
வந்திப்பதே'

என நாளும் நாம் அன்னை கருமாரியைப் போற்றித் துதித்திட அன்னையின் திருவருளால் இக பரசுகங்கள் யாவும் பெற்று இன்புறலாம்.

தேவி கருமாரியம்மன் புராணம், தேவி கருமாரியே தேவரும், மூவரும், யாவரும் கொண் டாடும் பராசக்தி என்பதை விளக்கும் வகையில் ஒரு நிகழ்ச்சியைச் சிறப்புற வருணிக்கின்றது. அவ்வரலாற் றினை இங்குநாமும் நினைந்து மகிழ்ந்து நெகிழ்ந்து உருகிடுவோமாக!

தேவேந்திரன் கண்டோர் வியக்கும் கலைப் பீடம் ஒன்றினை அமைத்து, ' இக்கலைப்பீடத்தில் வீற்றிருக்க ஆற்றல்படைத்த, மூவுலகங்களிலும் தலை சிறந்த கலை வல்லுநர் யார்?'' என்று முனிசிரேட்டர் களை நோக்கி வினவினான்.

உடன் அங்கிருந்த வசிட்டமாமுனிவர் ''எக் கலைக்கும் தாயாக விளங்கும் கலைமகளே மூவுலகங் களிலும் தலைசிறந்த கலைச்செல்வி'' என்று கூறினார்.

உடனே தேவேந்திரன் கலைமகளைச் சென்று வணங்கித் தன் கலைப்பீடத்து அமரவேண்டுமாய் வேண்டினான். கலைமகள் 'கலைகளை அருளும் காரணியாக நான் விளங்கினாலும், என்னையும், திரு மகளையும் கண்களாகக் கொண்டு விளங்கும் காஞ்சிக் காமாட்சியே கலைப்பீடத்தில் அமர்வதற்கு உகந்த வள்'' என்று கூறிவிட்டார்.

தேவேந்திரன் வானவர்களையும், முனிவர் களையும் அழைத்துக்கொண்டு காஞ்சிக் காமாட்சி யின் பாதகமலங்களைப் பணிந்து 'அன்னையே!

கலைப்பீடத்திற்கு எழுந்தருள வேண்டும்'' எனப் பணிந்து வேண்டிக் கொண்டான்.

காமாட்சியும் கலைப்பீடத்தில் அமரமறுத்து 'சங்கத்தில் அமர்ந்து தமிழ்வளர்த்த அங்கயற்கண்ணியே இப்பீடத்திற்கு உரியவள்'' என்று கூறிவிட்டாள்.

தேவர்கள் அனைவரும் மதுரையம்பதி எய்தி மீனாட்சியைப் போற்றித் துதித்துக் 'கலைப் பீடத்தில் அமர்ந்தருள எழுந்தருள'' வேண்டினர். மீனாட்சியும் தேவேந்திரன் கோரிக்கையை மறுத்து 'அன்னபூரணியாகக் காசியில் விளங்கும் விசாலாட்சியே இக்கலைப் பீடத்திற்கு உரியவள்'' என்று அருள் உரை புகன்றாள்.

உடனே தேவர்கள் அனைவரும் காசியை அடைந்து, விசாலாட்சியைத் துதித்துக் 'கலைப் பீடத்திற்கு எழுந்தருள வேண்டும்'' என வேண்டினர்.

தேவர்களின் வேண்டுகோளை மகிழ்வுடன் கேட்டருளிய விசாலாட்சி 'நான் அன்னபூரணியாக விளங்கியபோதிலும் அனைத்து உலகும் வியக்க அருள்ஆட்சிபுரியும் தேவி கருமாரியே கலைப்பீடத் திற்குரியவள். அனைத்துக் கலைகளுக்கும் தாயாக விளங்கும் கருமாரி அன்னையே கலைப்பீடத்தில் அமர்ந்தருளி ஆட்சிபுரிய ஆற்றல் கொண்டவள்'' என்று கூறித் தானும் புறப்பட்டு திருவேற்காட்டிற்கு தேவர்கள் புடைசூழ வந்துவிட்டாள் காசி விசாலாட்சி.

கலைமகளும், காஞ்சிக் காமாட்சியும், மதுரை மீனாட்சியும், காசிவிசாலாட்சியும், திருச்செந்தில் முருகப்பெருமானும், தேவரும், முனிவரர் யாவரும் வெற்றிலை, பாக்கு, பழங்களை வைத்து தேவிகருமாரி அன்னையின் அடிமலர்களைப் பணிந்து

''கலைஞானப் பெருங்கடலே! கடுந்தவர் மதியில் உறுங்
கருணையளே! கனிமொழிச்சி!
நிலைஞான முனிவரின் நாவிலுறைப்பூங்கொடியே!
நெற்றிவழி நீலி சத்தி
தலைஞான யோகியர்க்குக் குண்டலியாய், வாலையளாய்த்
தண்ணளிசெய் தண்டமிழ்ச்சி
நிலைஞான நல்லுணர்வை அரைக்கணத்தில் நல்கியருள்
பார்ப்பினியே நெடியேன் தங்காய்''

என்று போற்றிப் புகழ்ந்து 'கண்கண்ட தெய்வமே! கலைஞானப் பீடத்து அமர்ந்தருளிக் காத்தருள்வாய்! தாயே!'' எனத் தலைமேல் கரங்குவித்து வேண்டிக்கொண்டனர்.


அவர்களின் வேண்டுதலுக்கு இரங்கிய வித்தகி தேவி கருமாரி மனமகிழ்ந்து தேவேந்திரன் வழங்கிய வெற்றிலை, பாக்கு ஏற்றுக் கலைப்பீடத்து அமர்ந்து அருளி, 'இன்று முதல் எனக்கு வெற்றிலை, பாக்கு, கனி களைத் திருவிளக்கின் முன்வைத்து வழிபடு வோர்க்கு வேண்டியவரம் வழங்குவேன்'' எனத் திருவருள் புரிந்தாள்.

அச்சமயம் அன்னை கருமாரி தானே ஆதி பராசக்தி என்ற உண்மையை அனைவரும் தெளிவு பெறப் பின்வருமாறு கூறியருளினாள்.

'ஒரு காலத்தில் நான் தனியே இருந்து அரு ளாட்சிபுரியும்போது, ஒருநாள் உதயநேரத்தில் துணை வேண்டுமென நினைத்தேன். அவ்வளவில் ஐந்து முகங்களுடன் ஒருவன் தோன்றி 'தாயே!'' என்று அழைத்தான். பணிந்தவனை வாழ்த்திப் 'பிரமன்'' எனப் பெயர் தந்தேன். உச்சிநேரத்தில், இச்சா மாத்திரத்தில் சற்றுச் சிந்தித்தபோது நீலநிறம் கொண்ட நெடியோன் தோன்றி 'அருமைத் தங்கையே!'' என்று அழைத்தான். அவனுக்குத் 'திருமால்'' என்னும் பெயர் சூட்டினேன். நள்ளிருள் நேரத்தில் சற்று நினைத்தேன். அப்போது செம்மேனியனாய் ஒருவன் தோன்றிக் 'கோதையளே!'' என்று அழைத்து என் கரம்பிடித்தான். மகிழ்ச்சிகொண்ட நான் சிவனென துணைவந்த பெரு மானை 'சிவநாதன்'' என்று அழைத்து மகிழ்ந்தேன். திரிசூலமும், நுதல் விழியும் அவருக்கு நான் வழங்கி யதே. அவர் என் தலைவர் ஆனார். பின் பிரமனுக்குக் கலைமகளையும், திருமாலுக்குத் திருமகளையும் அளித்தேன். இப்பொழுது கருநாக உருக்கொண்டு, கருமாரி என்னும் நாமம் கொண்டு, ஈருருக் காட்டி அருள் பொழிகின்றேன். என்னை வணங்குவோர்க்குத் திருநீற்றால் அனைத்து வரங்களையும் நானே அருள் வேன். நானே சகலசத்தியும் 'ஆவேன்'' என்று கருமாரி கூறக்கேட்டு, அனைவரும் அன்னையைப் போற்றிப் புகழ்ந்தனர். இவ்வரலாறுகள் அனைத்தையும் தேவி கருமாரியம்மன் புராணத்தில் படித்து அன்பர்கள் இன் புறலாம்.

சூரர்களை மாய்ப்பதற்கு முருகப் பெரு மானுக்கு வேல்கொடுத்த பராசக்தியும் தேவிகருமாரியே ஆவாள். ஆகவேதான் 'வேற்கண்ணி'' எனும் திரு நாமமும் தேவி கருமாரிக்கு வழங்குகின்றது.

தேவி கருமாரி அளித்த வேலால் வேலாயுதத் தீர்த்தம் உண்டாக்கிய முருகப்பெருமான், அன்னை அளித்த திருச்சாம்பலால் சாம்பர்பொய்கையையும் உண்டாக்கினார். இத்தீர்த்தங்களில் நீராடப் பஞ்சமா பாதகங்களும் பறந்தோடும் என்று தலபுராணம் கூறுகின்றது.



சூரியன் தனக்குரிய ஞாயிற்றுக்கிழமையை அன்னை தன் திருநாளாகக் கொண்டு அடியவர்க்கு அருள்பாலிக்கவேண்டும் என்று வரம்வேண்ட, அன்னை கருமாரி சூரியனுக்கு 'அவ்வாறே ஆகட்டும்'' என அருள்புரிந்தாள். ஆகவேதான் திருவேற்காடு தேவிகருமாரி அம்மன் ஆலயத்தில் ஞாயிற்றுக் கிழமை வழிபாடு மிகச் சிறப்பினைப் பெற்று விளங்குகின்றது.

அகத்திய முனிவர் ஆடிமாதத்தில் ஒரு ஞாயிற்றுக்கிழமையில் அன்னை கருமாரியைப் போற்றி வழிபட்டமையால் ஆடியில் ஞாயிற்றுக்கிழமை வழிபாடு இத்திருத்தலத்தில் சிறப்பினைப் பெற்று விளங்குகிறது.

அகத்திய முனிவருக்கு இறைவனும் - இறைவியும் திருமணக்கோலம் காட்டியருளிய திருத்தலமும் இதுவே ஆதலால் திருவேற்காடு வந்து வழிபடும் அடியார்களுக்குக் 'கல்யாண சௌபாக்கியம்'' கைமேல் பலனாகக் கனிந்துவருவது கண்கண்ட உண்மையாகும்.


பஞ்சபூதங்களை ஐந்து நாகங்களாய் தன்முடி மேல் கொண்டு விளங்கும் தேவிகருமாரி அன்னையை ஆடியில் தேடிவந்து வணங்கிய மெய்யன்பர்கள் சகல சௌபாக்கியங்களும் பெற்று இன்புறுவார்களாக!

'அருள்திரு நீற்றினாலே
ஐந்தொழில் புரியும் அன்னை
அருள்திரு ஞானசக்தி
ஆதியாங் கருமாரித் தாய்
அருள்திரு வேற்காடு உற்று
ஆட்சி புரியும் சீலி
அருள்திரு நீறு அளிக்கும்
அன்னையைப் பணிவோர் வாழி''

★★★

# வா மழையே, வா!

- கவிதை : ஆக்கம்: **துரை. நாச்சிமுத்து**



வான்தரும் வரமே! பூமி
வளம்பெறும் அமுதே! இன்பத்
தேன்தரும் மலரின் மீது
திகழ்ந்திடும் துளியின் தாயே!
ஊன்பெறும் உணவே! எங்கள்
உயிர்பெறும் துடிப்பே! எங்கும்
மாண்புறும் மழையே! மக்கள்
மனம்பெறும் மகிழ்வே, வா, வா!

கதிரவன் வெப்பம் மீறக்
கடல்அலை ஆவி யாகி
மிதந்திடும் மேகம் ஆகி
மின்னலும் இடியும் ஆகி
இதந்தரும் குளிர்ந்த காற்று
இழைந்திடத் திவலை யாகி
உதவிடும் மழையாய் ஆகி
உலகினில் விரைந்து வா, வா!

நல்லவர் ஒருவர் வாழின்
நானிலம் எங்கும் பெய்து
நெல்லுடன் பயிர்கள் யாவும்
நிறைந்திடச் செய்வாய் அன்றோ?
நல்லதோர் இதயம் தன்னை
நயந்துநீ தேடிப் பார்த்தும்
இல்லையே என்றா எம்மை
ஏங்கிட வைக்கின்றாய், நீ?

நீதிசெய் மன்னர்க் கென்றும்
நெறியுடை மாதர்க் கென்றும்
வேதியர் தமக்கும் என்றும்
விளங்கியே மூன்று மாரி
மாதமும் பொழிதல் நின்றன்
மாறொணாக் கடமை யன்றோ?
நீதியோ நீ மறத்தல்?
நினைந்துநீ நிறைந்து வா, வா!

மக்களுள் கயமை, பொய்மை
மலிந்திடல் கூடும்; ஆனால்
மிக்கவே இயற்கை நீயும்
மீறுதல் முறையே ஆமோ?
எக்குறை எவர்செய் தாலும்
இயல்புதான் தாய் பொறுத்தல்!
இக்கணம் இதனை எண்ணி
இரங்கியே மழையே! வா, வா!

* * *

# கலங்காமல் காத்த கணபதி

- விசாகன்


விநாயகப்பெருமானை முழுமுதற்கடவுளாகப் போற்றி வணங்கிவருவது இந்துமதம். முதன்முதலாக எந்த விழாவோ, சடங்குகளோ தொடங்குவதற்கு முன்னும், எந்த விக்கனமும் நேரிடாதிருக்க முதற் கடவுளான விநாயகப் பெருமானைப் போற்றித்தான், பிறகு ஏனைய இஷ்ட தெய்வங்களுக்கு பூஜைகள் நிகழ்த்துவது வழக்கம். கணேசரை நம் நாட்டிலும் அல்லாது உலகம் பூராவும் கொண்டாடி வந்துள்ளனர். கணேசரை நாம் கணேஷ் என அழைப்பதுபோல், கிரேக்கர்களும், ரோமனியர்களும், ஐரோப்பாவில் ஜேனஷ் என்றதெய்வத்தை முதன்முதலில் வணங்கி விட்டு, பிறகு ஏனைய சடங்குகளை நிகழ்த்தி வந்துள் ளனர்.

தமிழ்நாட்டில் விநாயகர் விழாவை ஆவணி மாதத் தில் கொண்டாடி வருவது யாரும் அறிந்ததே. இன்றைய நாளில், சித்திரைமாதமே முதல்மாதம் என வழங்கி வந்தபோதிலும், நம் முன்னோர்கள், ஆவணிமாதத் தையே முதல் மாதமெனக் கருதி, முதன்முதலாக விநாயகரது சதுர்த்தி விழாவை கொண்டாடிய பிறகே, ஏனைய மதங்களில் பிறதெய்வங்களுக்கு விழா எடுத் ததை வழக்கத்தில் கொண்டுவந்துள்ளனர். ஒருசிலர், தைமாதம் முதல் மாதம் என்றும், மார்கழியை கடைசி மாதம் எனக் கூறி, தைமாதத்தில் பொங்கல்விழாவை கொண்டாடிய பிறகே, பிற விழாக்களை கொண்டாட கருத்து தெரிவிக்கின்றனர். ஒருசாரார் ஆவணி மாதம் தான் முதல் மாதம் என முதலில் கருத்தில் கொண்டு முதன்முதலில் விநாயகருக்கு விழாக் கொண்டாடி விட்டு, கடைசி மாதமாகிய ஆடிமாதத்தில் அவ ரவர்கள் வாழும் பகுதிகளில் உள்ள காவல் தெய்வ மாகிய அம்மனுக்கு படையலிட்டு கூழ்வார்த்தல் போன்றவைகளை நிகழ்த்தி வந்துள்ளனர். அதனால் ஆடி மாதத்தை கடைசிமாத மாகையில், மூத்தமாதம் அல்லது முதியமாதம் எனவும் வழங்கி நால்வரது வரலாற்றினை குறித்து பாடிய பாடலில் 'முதிய நல்லாடி'' என்று பாடியுள்ளதை இங்கு பொருத்திப் பார்ப்பது அவசியமாகும்.

இந்த கணேஷ்தான் அங்குள்ளவர்களால் ஜேனஷ் என அழைக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. ஜேனஷ் என்ற தெய்வத்தின் அடிப்படையில்தான் மேல்நாட்டினர், வருடத்திற்கு 12 மாதங்கள் என வகுத்து, முதல் மாதத்தை, ஜேனஷ் என்ற தெய்வத் தின் பெயராலேயே அமைக்கக்கருதி, ஜனவரி என பெயர் வழங்கினர் எனக்கூறப்படுகிறது. ஜேனஷ்தான் பிற்காலத்தில் ஜனவரி எனக் கூறப்பட்டதாக தெரி விக்கிறது. இதனால் ஏனைய தெய்வங்களுக்கு இல்லாத சிறப்பு விநாயகப் பெருமானுக்கு ஏற்பட்டது.

ஜேனஸுக்கும், கணேசருக்கும் இருக்கும் இவ் வொற்றுமையை அறிவியல் ரீதியாக, மொழியியல் ரீதியாக உறுதிப்படுத்த, Dr.Greems எனும் மொழியில் வல்லுனர் தோற்றுவித்த விதியொன்று நமக்கு பேருதவியாக அமைந்துள்ளது. அவ்விதி அவருடைய பெயராலேயே , 'கிரிம்ஸ் விதி' (Greems law) என அழைக்கப்படுகிறது. அவ்விதியின்படி, 'ஒரு மொழி யிலிருந்து இன்னொரு மொழிக்கு ஒரு சொல் சென்றால், அச்சொல்லில் உள்ள மெய்எழுத்துக்கள் யாதொரு மாற்றமும் பெறாது அப்படியே இருக்கும். உயிர்எழுத்துக்கள் மட்டுமே மாறும். இவ்வாறு சொற்கள் ஒரு மொழியிலிருந்து பிறிதொரு மொழிக்குச் செல்வதை "MIGRATION OF WORDS" என்பர். இன்றைய ஆங்கிலமொழியில் இருக்கும்சொற்கள் பெருமளவு பிறமொழிகளிலிருந்து சென்றவையாகும். தமிழில் அரிசி எனும் சொல், ஆங்கிலமொழியில் சென்று, ரைஸ் (RICE) எனப்பெயர் பெற்றதும், காசு எனும் தமிழ்ச்சொல் ஆங்கில மொழியில் (CASH) கேஷ் எனப் பெயர் பெற்றதும், இவ்விதியின் படியே யாகும். இவ்விதியை கருத்தில் கொண்டு பார்த்தால், கணேஷ் எனும் சொல், ஜேனஸ் என்ற ரோமானி யர்களுடைய மொழியில் உருமாற்றம் பெற்று வழங் குவது புலனாகும்.

பொதுவாக, கருவாய் வழியாக, ஆண் பெண் இருவருடைய உடலுறவு முயற்சியே, குழந்தைகளைக் தோற்றுவிக்கிறது. ஆனால் விநாயகருடைய பிறப் புக்கு, இறைவனுடைய தொடர்பு சிறிதும் இல்லை. இறையாகிய உமாதேவியார் தம் உடலின் உச்சியி லிருந்து உள்ளங்கால்வரை திரட்டி, தம் சக்தி அனைத் தையும் ஓர் உருவாக்கி விநாயகரை தோற்றுவித்தார். முருகப் பெருமானுடைய தோற்றத்திற்கு, இறைவி யாகிய உமாதேவியின் தொடர்பு சற்றுமில்லை. இறைவன் தனது நெற்றிக்கண்ணாகிய அக்னியில் இருந்து தோன்றிய 6 தீப்பொறிகள், வாயுவினால் ஏற்கப்பெற்று, கங்கையில் விடப்பட்டன. கங்கை யில் தவழ்ந்த அவை 6 குழந்தைகளாயின. எனவே



முருகனை, சிவகுமாரன் என்கிறோம். ஆனால் வினாயகரை சிவகுமாரன் என யாண்டும் சொல்லப்படவில்லை. வினாயகர் தம் அம்மாவின் பிள்ளை எனவே அழைக்கப்படுகிறார். முருகனையும் வினாயகரையும் உமையின் பிள்ளைகள் என்றும், சிவனின் பிள்ளைகள் என்றும் உலகவர் அழைப்பது உபசார வழக்கேயாகும்.

திருமுருகாற்றுப்படைக்கு உரைஎழுதிய நச்சினார்க்கினியார், பரிமேலழகர் போன்றோர்கள், முருகனைப் பிள்ளையார் என்றே குறிப்பிட்டுள்ளனர். வினாயகரே, உமாதேவிக்கு பிள்ளையாதலின், அவ்வுரை ஆசிரியர்களுக்கு பின்னர் போந்தவர்கள் வினாயகரை மூத்தபிள்ளை என அழைக்கலாயினர்.

11-ம் திருமுறையில் மூத்தபிள்ளையார் இரட்டைமணிமாலை எனும், நூலொன்று சேர்க்கப்பெற்றுள்ளது. முருகனை, இளைய பிள்ளையார் என்றே அழைக்கலாயினர். வினாயகரைப் பற்றி சுலோகம் ஒன்றில் 'உமாசுதம், சோகவிநாச காரணம், நமாமிதம், விக்னேஸ்வரபாதபங்கஜம்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அருணகிரியாரும்'', கைத்தல நிறைகனி'' எனத் துவங்கும் பாடலில், 4-வது அடியில் 'மத்தள வயிறனை உத்தமி புதல்வனை ''மட்டவிழ் மலர் கொடு - பணிவேனே'' எனப் பாடியுள்ளதையும் கவனிக்கலாம்.

நாயகர் எனும் சொல்லுக்கு முன் 'வி'' சேர்த்து விநாயகர் என அழைக்கப்படுகிறார். 'வி' என்பது வடமொழியின் உபசர்க்கமாகும். உயர்ந்த எனும் பொருள் படும்.

அதேபோன்று, சிவனை, விமலன் எனக் கூறப்படுவதும் கவனிக்கற்பாலது. மலம் இல்லாதவன் என்பதனை உணர்த்த 'வி' எனும் உபசர்க்கம் வந்துள்ளது.

சக்தியாகிய உமையின் மகனானதால் வினாயகரை சக்திவினாயகர் என அழைக்கிறோம். முருகனை சக்தி முருகன் என அழைப்பதில்லை. எம்பெருமான் அக்னி உருவானவன். அதனால் யாவாராலும் நெருங்க முடியாத எனும் பொருளில் அண்ணாமலை எனும் பெயர்காரணம் பற்றி வந்தது. வில்வத்துக்கும், துளசிக்கும், வெப்பத்தையும் சீதளத்தையும் போக்கும் தன்மையுள்ளதுபோல் அசோகத்துக்கும் ஒரு குணம் உண்டு. அதன் நிழலில் தங்கி இருப்பவர்களுடைய சோகத்தை மாற்றும் குணம் உண்டு. அப்பெயரே அம்மரத்துக்கு காரணம்பற்றி வந்ததுதான்.

இராவணன் சீதையை கொண்டுபோய், இலங்கையில் அசோகவனத்தில் வைத்தான். இராமனைப் பிரிந்து வந்த சோகம் சீதைக்கு இருக்குமல்லவா? அச்சோகம் சீதைக்கு இருக்கக்கூடாது என நினைத்தே, சோகத்தை மாற்றும் குணமுடைய அசோகமரங்கள் உள்ள வனத்தில் தங்கவைத்தானே தவிர, சீதைக்கு தீங்கு நேராத வண்ணம் கொண்டான். அதே போன்று அடியவர்களுக்கு நேரிடும் சோகத்தை போக்குவதினால் வினாயகருக்கு 'சோகவிநாசகாரணம்'' என்கிறது சுலோகம்.

அமெரிக்காவில், சிகாகோவில் நடைபெற்ற சர்வமதமாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற, சுவாமி விவேகானந்தர், அங்கு நம் இந்து மதத்தின் சிறப்பை எல்லாம் செய்தார். அமெரிக்காவில் பிள்ளையார் கோயில் ஒன்று கட்டி முடித்த பின்னரே தாயகம் திரும்பினார்.

இந்தோனேஷிய நாட்டில், நாளதுவரை, பண நோட்டுகளில் வினாயகர் படம் பொறித்துள்ளது மிகவும் பாராட்டத்தக்கது. இதற்குச் சான்று, அண்மையில் வெளிவந்த 'தினமணி'' நாளிதழில் 29.2.2001 தேதியிட்ட பத்திரிகையில் பார்க்கலாம். எல்லாத் தெய்

வங்களுக்கும் விழாக்கள் பல இருந்தாலும் வினாயக ருக்கு மட்டும் வருடத்தில் ஒரே ஒரு நாள் விழா கோலாகலமாகக் கொண்டாடிப் பெருமைசேர்த்தனர்.

எல்லா தெய்வங்களையும் பொதுவாக ஒரே பாணி யில் வணங்கும் விதத்தில் ஏற்படுத்திக் கொண்ட போதிலும், வினாயகருடைய சந்நிதானத்தில் மட்டும் வணங்க, இருகரங்களையும் செவிகளைப் பற்றிக் கொண்டு, சிரத்தில் குட்டிக்கொண்டும், தோப்புக் கரணம் போடும் பாங்கினுக்கு, பின்னணியாக உள்ள வரலாற்றினை முதலில் தெரிந்து கொள்ளுதல் அவ சியம்.

மாகதர் எனும் முனிவர்க்கு, கஜாசுரன் என்ற மைந்தன் பிறந்தான். தனது அசுரபலத்தினால் முனிவர் களையும், தேவர்களையும் பெரும்துன்பம் கொடுத்து வந்தான். அவர்களை வேலையாட்களாகவும் அமர்த்தி அடிமைகளாக்கினான். அவன் பெயரை கேட்டாலே, எல்லோரும் கதிகலங்கி மதிமயங்கி, அங்கம் பதறி னார்கள். அவனைக் கண்டதும், தோப்புக்கரணம் போட்டும், சிரசில் குட்டிக்கொண்டும், தேங்காய் உடைத்தும், பயபக்தியுடன் நடந்து கொண்டனர். கஜாசுரன், விளையாட்டாக விண்ணிலே சென்றகாலை, அங்குள்ள அண்டத்தின் சுவரை இடித்துவிட்டான். அதனால் ஆகாசகங்கை உடைப்பெடுத்து பூலோகம் முழுவதும் நீரினால் மூழ்கினபோதிலும், ஆலங்குடி எனும் தலம் மட்டும் மூழ்காமல் இருந்தது; ஜீவராசி களும் மரம்செடி போன்றவைகளும் நாசமடைவதை கண்டதேவர்கள், மனங்கலங்கி இத்தலத்தில் வீற்றி ருக்கும் வினாயகப் பெருமானை வணங்கி, அரக்கனின் கொடுஞ்செயலை அழிக்குமாறு பிரார்த்தித்தனர். அண்டினோனரை காக்கும் வினாயகப்பெருமான், தன் துதிக்கையால் தண்ணீரை எல்லாம் உறிஞ்சி, அண்டத்தில் ஏற்பட்ட துவாரத்தை தன்கால் பெருவிரல் நகத்தால் அடைந்து, கஜாசுரனையும் வதம்செய்து, யாவரையும் காத்தருளினார்: அன்றுமுதல் இத்தலத் தில் வீற்றிருக்கும் வினாயகப் பெருமான், ''கலங் காமல் காத்த கணபதி'' என அழைக்கப்பட்டதோடு, அன்று முதல் மக்கள் தேவர்கள் யாவரும் கஜாசுரனை எவ்வாறு முன்பு தெண்டனிட்டு, தோப்புக்கரணம் போட்டும், தலையில் குட்டிக் கொண்டும் தேங்காய் உடைத்தல் ஆகியவற்றை செய்தனரோ, அதன் நினை வாலேயே அன்று தொட்டு ஆலங்குடியில் வீற்றிருக் கும் வினாயகரையும் துதி செய்து வணங்கி வரலாயி னர்.

இத்தலம் இரும்பூளை வனம் என்றும் வழங்கப் படுகிறது. இங்கு பூளைச் செடிகள் காடென மண்டிக் கிடந்தால் இப்பெயர் வழங்கலாயிற்று.

''எழிலார் இரும்பூளை'' என்றும் 'இணையில் இரும்பூளை'' என்றும் ஞானசம்பந்தரால் போற்றப் படுகிறது. இத்தலம் பஞ்ச ஆரண்யதலங்களுள் ஒன் றாகும். இனி வினாயகருக்கு படைக்கும் நிவேதன பொருட்களைச் சிறிது ஆராய்வோம்.

சைவ சமயத்தில், இறைவனுக்கு நைவேத்யம் செய்ய வேண்டும். பழங்கள், மற்ற உணவு வகை களைப் படைக்க வேண்டும் என்று எங்கும் விதிக்கப் படவில்லை. மூவர்களால் அருளிச் செய்த திருப்பாடல் கள் எதனிலும் இதனைக்குறித்து பாடினதாக தெரிய வில்லை. இறைவனை நீரால் அபிஷேகம் செய்வித்து, பூவாலுமே அர்ச்சிக்க வேண்டும் என்பதனை நாவுக் கரசர்.

இறைவனுக்கு படையல் இடும் வழக்கம் பிற் காலத்தில் தான் வந்து புகுந்தது. ஔவையார் பாலுடன் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை நாலும் கலந் துனக்கு நான் தருவேன் எனப்பாடியுள்ளார்.

தக்கயாக பரணி எனும் நூலில், எள்ளுருண்டை, தேங்காய், அவல், அப்பம், வாழை, மா, பலா, கிழங்குகள், பயறு போன்ற தானிய வகைகள் வினாயக ருக்குரிய நிவேதனப் பொருள்களாக கூறப்பட்டுள்ளன.

வினாயகரைப் பற்றிய வடமொழி சுலோகம் ஒன்றில், 'கபித்த ஜம்பு பலசாரபட்சிதம்'' என்று கூறப் பட்டுள்ளதின் கருத்து, விளாம்பழம், நாவற்பழம் ஆகியவற்றின் சாற்றில் மிகவும் விருப்பமுடையவர் என்பதாக தெரிகிறது.

மேலே கூறிய நிவேதனப் பொருள்களை எல்லாம் விஞ்சிவிடும் விதத்தில் அருணகிரியார், 'பக்கரை விசித்ரமணி'' எனத்துவங்கும் பாடலில், பின் 4 அடி களில் கீழ்குறித்த நிவேதனப் பொருள்களை குறித்து பாடியுள்ளார்.

கரும்பு, அவரை, நற்கனிகள், சர்க்கரை, பருப்பு, நெய், எள், பொரி, அவல், துவரை, இளநீர், வண்டு எச்சில் (தேன்) பயறு, அப்பவகை, பச்சரிசி, பிட்டு, வெளரிப்பழம், இடிப்பல்வகை (மோதகம்), தனிமூலம் (கிழங்கு வகைகள்) மிக்க அடிசில் (சித்ரான் னம்), கடலை - போன்றவைகளை பட்சணமாக கொள்ளும் விக்னசமர்த்தன் எனும் அருட்கடலே என்பதாக பாடியுள்ளது கவனிக்கத்தக்கது.

# திருநந்திதேவர்

- திருமதி மீனாட்சி கோகுலவாசன்

'மாகேச்வரம்' என்ற ஒரு மலை - பழ மரங்களும், பூமரங்களும் பூத்துக்கொண்டும், காய்த்துக் கொண்டும், நல்ல நீரூற்றுகளும் நிறைந்து, காண்பவர் கண்களையும், கருத்தையும் கவர்ந்திழுக்கும் அழகும் மகிமையும் கொண்டதாக விளங்குகின்ற மலையாகும்!

சித்தர்களும், முக்தர்களும், ரிஷிகளும் அந்த மலையில் சிவத்தை நோக்கி தவம் புரிந்து கொண்டிருப்பார்கள்.

இத்தகைய மாகேச்வரம் மலையிலே ஒரு மாதவ முனிவர், நீண்டகாலம் தவம்புரிந்து வந்தார். ஒரு சமயம் அவர்தன் நண்பர்களுடன் உலகைச் சுற்றிப் பார்க்கச் சென்றவர், இடையில் யமபுரம் வரநேர்ந்தது.

யமதர்மனும் முனிவரை வரவேற்று உபசரித்தான். முனிவர் நரகங்களைப் பார்வையிட்டு வரும் போது, இடையில் ஒரு கற்குன்று இருந்தது. முனிவரும் அக்குன்றை நோக்கியவர் அதைச் சுட்டிக் காட்டி, ''யமதர்மனே! இக்கற்குன்று இங்கு இருக்க வேண்டிய காரணம் யாது'' என்று கேட்டார்.

யமதர்மனும், '' முனிவரே! பூமண்டலத்தில் சிறுவனாக நீங்கள் இருந்தபோது, தங்கள் வீட்டிற்கு வந்து உணவு உண்ட சிவ ஞானியின் உணவுப்பாத்திரத்தில் விளையாட்டாக ஒருசிறு கல்லை எறிந்தீர்; அந்த சிவஞானி அன்னத்துடன் சேர்த்து உண்டார். அந்தக் கல் இங்கு வந்து நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டிருக்கிறது.

தாங்கள் இங்கு வரும்போது இந்தக் குன்றை உடைத்துக் கரைத்துத் தங்களை உண்ணும் படி செய்வார்கள். நல்வினையோ, தீவினையோ ஒன்றுக்கு ஆயிரமாக வளரும் அல்லவா? ஆகவே ஞானியின் உணவில் கல்லை இட்ட நீங்கள் இந்தக் குன்றை உண்டு அந்த வினையைத் தீர்க்க வேண்டும் என்றார்.

இந்தச் சொற்களைக் கேட்ட முனிவர் நடுங்கி விட்டார். ''யமதர்மனே! இந்த வினை தீர ஏதேனும் வழி இருக்கிறதா'' என்று கேட்டார்.

யமதர்மனும், ''அருந்தவ முனிவரே! வினையை விதைத்தவன், வினையை உண்பான். அதனால் இக்குன்றுக்கு நிகரான ஒரு குன்றை மண்ணுலகில் தாங்கள் கண்டு, அதனை உடைத்துக் கரைத்துக் குடித்தால், இந்தக் குன்று இங்கே கரைந்து ஒழியும்'' என்றார்.


முனிவரும், யமதர்மனிடம் விடைபெற்றுக் கொண்டு, மண்ணுலகம் வந்தடைந்தார். தாம் நகரத்தில் கண்ட குன்றைப்போல், ஒரு குன்றைத் தேர்ந்தெடுத்தார். அதனை சிறுசிறு துண்டுகளாக்கி நாள் தோறும் அந்தக் கல்லைத் தூளாக்கி, நீரில் கரைத்துக் குடித்துத் தம் தவ சக்தியால் அந்தக்குன்றை அதம் செய்தார். சிலையை அதம் செய்ததினால் 'சிலாதர்' என்ற பெயர் அவருக்கு ஏற்பட்டது.

சிலாதர் பூவுலகில் உத்தம குணம் பொருந்திய சித்திரவதியார் என்ற பெண்ணை மணந்து கொண்டார். மனைவியுடன் இருந்து, ஒழுக்கங்களை நல்ல விதமாகப் பேணி நல்லறம் புரிந்தார். சிவ பெருமானைக் குறித்துத் தொழுது ஐம்பெரும் வேள்விகளையும் செய்து வந்தார்.

பின்னொரு சமயம் அவர் யமபுரம் போய்ப் பார்த்தார். அந்தக் குன்று மறைந்து விட்டிருப்பதைக் கண்டு மகிழ்ந்தார்.

சிலாதர், யமபுரம் சென்றதில், அங்கு சிலர் நகரத்திலிருந்து துன்பமடைவதைக் கண்டார். அவர்களை நோக்கி, ''நீங்கள் யார்'' என்றார்? அதற்கு அவர்கள், ''நாங்கள் சிலாதருடைய பித்துருக்கள்; அவன் தவம் செய்து சுவர்க்கத்துக்கு வந்தான், ஆனால் அவன் புத்திரனைப் பெற்றவனில்லை'' என்று சொன்னார்கள். அதற்கு சிலாதர், ''நான் தான் சிலாதன்; எனக்குப்புதல்வர்கள் உண்டாகவில்லையே என்றார். அதற்கு பிதுருக்கள், ''நீமகாதேவனை ஆராதித்து ஒருபுதல்வனைப் பெறுவாயாக'' என்றார்கள்.

அதைக் கேட்டதும் சிலாத முனிவர் பூவுலகிற்குத் திரும்பினார். நெடுங்காலாகியும் ஒரு புத்திரப் பேறு வாய்க்காததால் ஒரு நாள் அவர் மனைவி, 'குலம் விளங்க ஒரு புதல்வன் வேண்டும்' என்று பலவாறு எடுத்துரைத்தாள். அவரும் தம் மனைவியின் புத்தி கூர்மையான வார்த்தையைக் கேட்டு, அவ்வண்ணமே,



'அரிய தவம் செய்வேன்' என்று திருநீற்றை உடம் பெல்லாம் பூசிக்கொண்டு, ஆயிரம் ருத்ராட்சம் அணிந்து கொண்டு தவம் செய்யப்புறப்பட்டார்.

வெய்யில் காலத்தில் வெய்யிலிலும், மழைக் காலத்தில் வெட்டவெளியிலும், பனிக்காலத்தில் நீரிலும், காயும் கனியுமின்றி, நீரும் காற்றும் இன்றி ஒருகாலில் நின்று, கரங்களை உயரக்கூப்பி, ஒருமைப் பட்ட மனத்துடன், திரு ஐந்தெழுத்தை உச்சரித்து , சிவபெருமானைக் குறித்து ஆயிரம் தேவ வருடங்கள் தவம் புரிந்தார்.

சிவபெருமானும் ரிஷப வாகனத்தின் மீது தோன்றி அவர் முன்பு காட்சியளித்தார்! ''சிலாதா! உனக்கு வேண்டும் வரம் யாது''? என்று கேட்டார். சிலாத முனிவர் அவரைப் பணிந்து எழுந்து, ''பரம தேவனே! மகேசா! மன்மதனை எரித்தவரே! யோகி களால் தியானிக்கப்படுபவரே! பர்வதவாசியே! ஞானதேஜஸ்வரூபியே! தேவதேவா! வரதா! சர்வ வியாபியே! லோகநாயகரே! இஷ்டகாமியங்களைக் கொடுக்கவல்ல திருநீறும் ருத்ராட்சமும் அணிந்த வரே! அடியேனுக்கு சத்புத்திரனாக ஒருவனைத் தந்தருள வேண்டும்,'' என்று பிரார்த்தித்து, மீண்டும் பணிந்து, ''சுவாமி! அத்தகைய இறவாத்தன்மையுள்ள மைந்தனை தாங்கள் எனக்குக் கொடுப்பீர்களாயின் என் குலமும், உலகமும் உய்யவும், சிவநெறி ஈடேற வும் அருள் புரிய வேண்டும்.'' என்றார்.

முக்கண்ணரான சிவபெருமான் மகிழ்ச்சி யடைந்து, ''சிலாதா! நீ விரும்பிய வரம் தந்தேன்; நீ செய்த இந்த தோத்திரத்தை துதி செய்பவர்கள் துர் மரண மடைய மாட்டார்கள். பூத, பிரேத, பைசாச, யக்ஷ, ராக்ஷச துன்பங்களையும் அடைய மாட்டார் கள்''!, என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தார். அதற்குப் பிறகு சிலாத முனிவர், மகிழ்ச்சியுடன் தன் ஆசிரமத்திற்குச் சென்று நடந்தவற்றை அங்கிருந்த வர்களிடம் சொன்னார். சில காலம் சென்ற பிறகு ஒரு வேள்வி இயற்ற நினைத்துப் பூமியை உழுவித்த போது, அந்தக் கலப்பையின் படைச்சாலில், கோடி மன்மத னுக்கு இணையான அழகும், அக்னியைப்போன்ற காந்தியும் கொண்டு, எல்லா அணிகலன்களையும் அணிந்தவண்ணம் ஒரு குழந்தை இருப்பதைக் கண் டார். அப்போது அங்கிருந்த முனிவர்கள் இது அரக்கர்களுடைய மாயையாக இருக்குமோ என்று அங்கிருந்து போய்விட முயன்றனர். அப்பொழுது அக்குழந்தை 'அப்பா' என்று வாய்விட்டுக் கூப்பிட்டுக் கொண்டே மெல்ல நடந்து முனிவரை அணுகியது. சிலாதர் அந்தக் குழந்தையின் குரலைக்கேட்டும், அதை நம்பாமல் அரக்கர் மாயை என்றே நினைத்து அங் கிருந்துபோக முயன்றார். அப்போது ஒரு வானொலி முழங்கியது. ''இவன் உன் புதல்வன்! சிவபெருமான் முன்பு உன் தவத்திற்கு இரங்கிமைந்தனைத் தந்திருக் கிறார். நீ இந்தக் குழந்ததையை எடுத்து வளர்ப்பா யாக! இதனால் உனக்கும், உன் பித்துருக்களுக்கும் மகிழ்ச்சி உண்டாகி இவனுக்கு 'நந்தி' எனப் பெய ருண்டாகும்'', என்று அந்த வானொலி முழங்கியது.

அதைக் கேட்ட சிலாத முனிவர், அந்தக் குழந்தையை எடுத்து, மார்போடு அணைத்துக் கொண்டு, உச்சி மோந்து, முத்தமிட்டு, ஆனந்தக் கடலில் மூழ்கினார். குழந்தையை எடுத்துக் கொண்டு தம் ஆசிரமம் அடைந்தார். அங்கு தம் மனைவி யிடம் குழந்தையைக் கொடுத்தார். சித்ரவதி மட்டற்ற மகிழ்ச்சியுற்றாள். மகனை மார்போடு அணைத்தார்! பால்பெருகியது! மகனுக்குப் பாலூட்டினார்; அருமை யுடன் பாராட்டினார்.

சிலாதரும் நல்லபடியாக வேள்வியை முடித்து, முனிவர்களை உபசரித்து விடைதந்தனுப்பினார்.

பிரம்மன் இந்திரனை நோக்கி, '' இந்தப் புதல் வன் எல்லோருக்கும் ஆனந்தத்தை அருளுவதனால் 'நந்தீசன் என்று அழைக்கப்பெறுவான்,'' என்றார். ''சிலாதர் மகன் ஆதலின் இவன் ''சைலாதி'' என்று விளங்குவான்,'' என்று முனிகணங்கள் வாழ்த்தி னார்கள்.

நந்தீசர்இனிது வளர்ந்தார். ஜாதகர்மம், சவுனம், உபநயனம் முதலிய கிரியைகளை அந்தந்தகாலத்தில் செய்தான். வேதத்துக்குரிய சொற்பதக்கிரமங்கள், புராணங்கள், தர்மசாஸ்திரங்கள், ஆயுர்வேதம், தனுர் வேதம், காந்தர்வேதம், சிற்பம், சகுனம், சர்ப்பவித்தை, பரகாயப்பிரவேசம் (கூடுவிட்டு கூடுபாய்தல்) அஷ்ட வியாகரணம், உபபுராணங்கள், இதிகாசங்கள், தேவ

யாகம், பிதுர்யாகம், மானுடயாகம், பூதயாகம், பிரமயாகம், என ஐந்து நல்ல முறைகளையும், மந்திரங்கள், மாத்ருத்வம் (தாயைப்பற்றி) யோகம் முதலியவற்றையும் அந்த நந்தி பகவான் ஐந்தே தினங்களில் தம்தந்தையிடம் அறிந்து, யாவற்றிலும் சாமார்த்தியமும், கம்பீரமும், பிரிய வசனமும், அசூயை யின்மையும் கொண்டு, மனதிற்கும் பார்வைக்கும் ஆனந்தம் ஏற்படச்செய்பவராக வளர்ந்து, ஏழு வயதை அடைந்தார்.

அப்போது மித்ராவருணன் என்ற தேவர்கள், தவ முனிவர் வடிவில், சிலாதரின் ஆசிரமத்தை அடைந்தனர். சிலாதர் அவர்களை வரவேற்று உப சரித்து உயர்ந்த ஆசனத்தில் அமர்த்தினார். அப்போது அவர்கள், ''நீங்கள் நலமா? இவ்வாசிரமத்தில் அனை வரும் நலமா? உம்புதல்வன் வேத சாஸ்திரங்களை அனுசரித்து நடக்கிறானா''?, என்று பலவாறு விசாரித் தனர். சிலாதரும் தம் மகனை அழைத்து முனிவர்களிடம் வணங்கி ஆசிபெறுமாறு சொன்னார். முனிவர்களும், ''நீ குரு பணிவிடைகளைச்செய்து, அழியாத பதவியை அடைவாயாக'' என்று வாழ்த்தினார்கள். அதைக் கேட்ட சிலாத முனிவர், ''முனிவர்களே! நீங்கள் மகாதபசிகள்; திரிகாலஞானிகள்! இப்படியிருக்க, என்மகனை தீர்க் காயுளாக இருக்கும்படி வாழ்த்தவில்லையே! பெரி யோர்களாக இருப்பவர்கள், தம்மை வணங்கும் போது, 'தீர்க்காயுளாக' இருக்கவும் என்று தானே வாழ்த்துவது வழக்கம், ''நீங்கள் ஏன் என் மகனை அப்படி வாழ்த்த வில்லை'' என்று மனம் பதறியவராகக் கேட்டார். அதற்கு முனிவர்களும், ''சிலாதனே! உன் மகனுக்கு எட்டே வயதுதான், ஆகவே நாங்கள் அவ்வாறு வாழ்த்தவில்லை'', என்றார்கள். இதைக்கேட்ட சிலாத முனிவர் மிகவும் துக்கங்கொண்டு மயங்கித் தரையில் சாய்ந்தார்.

சிலாதருடைய நிலையைக் கண்ட நந்தீசன் தன்தந்தையிடம் விவரம் அறிந்து, ''தந்தையே! வருந்த வேண்டாம், மரணத்தை வெல்ல மகாதேவரைவிட சிறந்தவர்களில்லை! அவர் நிர்மலமான பக்திக்கே திருவுள்ளம் களிப்பவர். அத்தகைய சிவபெருமானை பக்தியுடன் துதித்து, மிகவும் எளிதாக எந்தவிதத் தடையு மின்றி அவரை தரிசிப்பேன்! நீங்கள் புத்திர வாஞ் சையை விடுத்து, தைரியமாக என்னை அனுப்புங்கள். உங்கள் மனம் விரைவில் மகிழ்ச்சியடையும்படி, நான் பக்தி செய்து மீள்வேன்! நான் நின்றும், திரிந்தும், ஓடியும், காட்டில் இருந்தும், எந்த நிலையிலிருந்தா லும் என்னை, நீங்கள் பயப்படும் யமனானவவன் (மருத்யுஞ்சன்) பார்க்கக்கூட முடியாமல் தவிப்பான். நீங்கள் இந்த விஷயத்தில் தைரியமாக இருக்கலாம்'' என்றார்.

சிலாத முனிவரும் நந்திதேவர் கூறிய வார்த்தை களை நம்பி, சிறிது மனதிடத்துடன், ''யமனை வென்று வருக'' என்று வாழ்த்திவிட்டு, ''மகனே! நீ இடை யூறின்றி தவம் செய்வாயாக'' என்று சொன்னார்.

நந்திதேவரும், தன் தந்தையின் கால்களில் வீழ்ந்து வணங்கி, தவம் செய்து மிருத்யுவை (யமனை) வென்று வரப்புறப்படலானான்.

சிலாத முனிவரிடம் விடைபெற்றுச் சென்ற நந்திதேவர், நதிகளில் சிறந்த 'புவனை' நதியில் மூழ்கி நின்று, சித்தத்தை சிவன் பால்வைத்து, வெட்பதட்பங் களைக் கருதாமல், பரமசிவத்தில் ஐக்கியமானவர் போல் விளங்கினார். உருத்திரமந்திர ஜபத்தை ஒரு கோடிவரை ஜபித்து முடிக்கும்போது பரமசிவன் அவருடைய தியானத்திற்கு மகிழ்ந்து காட்சியளித்து, ''நீ விரும்பிய வரத்தைக்கேள்,'' என்றார். நந்திதேவர் தமது தியானத்தை நிறுத்தி சிவபெருமானை வணங்கினார், மூவரும் தேவரும் காணாத முழுமுதற் கடவுளைக் கண்ட நந்தீசர் ஆனந்தப்பரவசமானார்; குதித்தார், அழுதார், தொழுதார், ஆடினார், பாடினார், பித்தனைப் போல ஓடினார்; பல முறை பணிந்தார். ''மிருத்யுஞ்சய மூர்த்தியே! நான் மீண்டும் ஒரு கோடிதரம் உருத்திர ஜபம் செய்து முடிக்கும்படி அருள் பாலிக்க வேண்டும்'' என்றார். ''அவ்வாறே ஆகுக'' என்று சிவபெருமான் கூறி மறைந்தார். நந்திதேவர் மீண்டும் நீரிலிருந்து ஒருகோடி ருத்திரஜபம் செய்து முடித்தார். அப்பொழுது சிவபெருமான் ரிஷபவாகனத்தில் காட்சி தந்து, ''நந்தீ! உனக்கு என்ன வரம் வேண்டும்'' என்று கேட்க, நந்திதேவர், ''இறைவா நான் மீண்டும் ஒருகோடி முறை ஜபம் ஜெபிக்கும்படி அருள் செய்ய வேண்டும்'' என்றார். 'அவ்வாறே ஆகுக' என்று வரமளித்து சிவ பெருமான் அருளி மறைந்தார். இது போலவே சிவபெருமானிடம் ஆறு முறைகள் வரம் பெற்று, ஏழுகோடி தரம் ஜபித்து முடித்துப்பிரளய காலாக் கினியைப் போன்ற தேஜசோடு நந்திதேவர் ஜொலித் தார். அவரது தேஜசைக்காண முடியாத தேவர்களும், யமதர்மன் முதலிய அஷ்டதிக்பாலகர்களும் பயந்து நடுங்கினார்கள். அவருடைய தவ ஒளிவிண்ணுலகத் தையும் ஒளி மயமாக்கியது. எதுகுறித்து இந்த தவத்தை இவர் செய்கிறாரோ என்று கருதி, மாலயனாதிவான வர்கள் நடுங்கினார்கள். தங்கள் பதவியைக் குறித்துத் தவம் புரிவாரானால் தம்பதவி போகுமே என்று கவலை கொண்டனர்.

சிவபெருமான் நந்தியின் திடசித்தத்தைக் கண்டு திருவுளம் மகிழ்ந்திருக்கையிலேயே, நந்தி தேவர் எட்டாவது கோடியை முடிக்கக்கருதி உறுதி யுடன் ஜபித்துக் கொண்டிருந்தார். நந்தியின்ஜபம் முடியும் தருணத்தில் சிவபெருமான் காள கண்ட நாக பூஷணபரதாரியாக, வேதங்கள் நான்கும் புடை சூழ்ந்து முழக்கம் செய்யவும், பிரமனும் விஷ்ணுவும் இருபுறமும் நிற்கவும், கணபதி, கந்தர் தம்முடன்

இருக்கவும் பார்வதிதேவியருடன், நந்திதேவர் முன் காட்சியளித்து, தமதுதிருக்கரத்தால் அவருடைய கையைப்பற்றி, புவனை நதிக்கரைக்குக் கொண்டு சென்று, அவரது உடலை ஆசையுடன் தடவிக் கொடுத்து, ''சிலாதிபுத்திரனே! உன்னுடைய திட வைராக்கிய ஜபத்தைக்கண்டு நான் பெரிதும் மகிழ்ந் தேன்; நீ நல்ல தவத்தைச் செய்தாய்; உன் மனதில் யாதுள்ளதோ அதைச் சொல்ல, சிறிதும் அஞ்ச வேண்டாம்'' என்றார். நந்திதேவர் சிவபெருமானைப் பணிந்து, '' மகாதேவரே! அடியேன் இனி மேலும் ஒருகோடி ஜபம் செய்ய வேண்டும்'', என்றார். அதற்கு சிவபெருமான், ''நந்தி! இது வரையில் நீ செய்த ஏழு கோடி ஜபத்திற்கே உனக்கு எல்லாப் பதவிகளையும் கொடுத்திருக்க வேண்டும்! இனி நீ ஜபம் செய்ய வேண்டாம்; மீண்டும் ஜபம் செய்து யாது வரம் பெறுவாய்? பிரம்மத்வம், விஷ்ணுத்வம், இந்திரத் வம், சூரியதவம், ருத்திரத்வம், மோக்ஷம் அல்லது எனக்கு சமமானதவம் இவற்றில் எதை விரும்பினா லும் கொடுப்பேன்'', என்றார். அதற்கு நந்திதேவர், ''சுவாமி! எனக்கு இந்திரத்துவம், பிரம்மத்துவம், சூரியத்வம் முதலியன எதுவும் வேண்டாம்; அடிக்கடி இறப்பதுமான ஜனனமரண துக்கங்களை அனுபவிக்கா மல் இருக்க வேண்டுகிறேன். மேலும் தாங்கள் தேவி மைந்தர்களுடன் எழுந்தருளியிருக்கும் அந்தப்புரத் தில் நானும் உடன் இருக்க வேண்டும்; தாங்களே எனக்குக்கதி; எனக்குக் குருநாதர் நீரே! அடியேன் உம்மிடம் அன்பும் பக்தியும் பெற்றுத்தங்களையே வழிபடும் எனக்கு ஜனன மரண துக்கங்களை ஒழிக் கும் ஆற்றலும், என்னால் சற்கதியை அடைய விரும்பி என்னையுண்டு செய்த எனது பிதுர்வர்க்கத்துக்கும் அழியாத சிவபதவியும், என்னால் ஸ்துதிசெய்யப்பட்ட ஸ்தோத்திரத்தை வாசித்தவர்களுக்கு கைலாயவாச மும், சதுர்த்தசிதிதியில் இந்த நாமங்களால் அர்ச்சித்து, தங்கள் நாமங்களை ஆயிரம் முறை கணக்கிட்டுச் சொல்பவர்களுக்கு காணாபத்யமும் தந்தருளவேண் டும்'', என்று பணிந்து வணங்கிக் கண்ணீரால் நீராட்டி னார்.

இதனைத் தேவர்கள் கேட்டதில் தம்பதவிக்கு ஆபத்தில்லை என்று மகிழ்ந்தார்கள்.

சிவபெருமானும் அவரை எழுப்பி விபூதி யால் உடலை நீராட்டி, திருவாய் அமுதாலும் நீராட்டி இருமுறை நீராட்டினார். பிறகு நந்தியை நோக்கி, ''மகனே! என்னை தரிசித்தவர்கள் ஒரு போதும் (மரண) ம்ருத்யுபயம் அடைவதில்லை. என்னிடம் உனக்கு நிலையான பக்தி இருப்பதை அறிவேன். நீ கேட்டவாறு மூப்பு, சாக்காடு, தாபத் திரயங்கள் இவற்றை ஒழித்து உன்னுடைய பிதுருக்களுடன் என் னுடைய பாதாரவிந்தத்தில் வாழக்கடவாய்! உன்னை தரிசத்தவர்களும், என்னை தியானித்தவர்களும் என் சிவலோகத்தில் வாழ்வார்கள். நீ எனக்கு இஷ்டமான வனாகவும், என் கணங்களுக்கு அதிப னாகவும், எனக்கு இணையான பராக்கிரமமும், யோக வலிமையையும் பெற்று என் அருகிலேயே வாழ்வாயாக; நீ கணாதிப னாய் விளங்குவாய்; என் ஆணை எங்கும் நடப்பது போல், உன் ஆணையும் நடக்குமாறு அதிகார சக்தியையும் தந்தோம்; ஆகவே அதிகாரநந்தியாக விளங்குவாயாக'', என்று கருணை புரிந்தார். மேலும் சிவபெருமான், ''க்ஷீரசாகரமத்தியில் விளங்கும் தீபத் தினையும், எப்பொழுதும் கிழியாமல் பரிமளத்துடன் விளங்கும் வெண்பட்டு ஆடையையும், ஆயிரம் தாமரை மலர்களான மாலையையும் உனக்குத்தரு கிறேன்'', என்று அவ்வாடையை உடுத்தி, அந்த மாலையைக் கழுத்தில் அணிவித்தார். அதனால் நந்தி தேவர் முக்கண்ணரைப்போல் விளங்கினார்.

சிவபெருமான், ''நந்தி! உன்னைப்போல பயன் கருதாமல் பக்தி ஒன்றையே கருதித்தவம் செய்தவர் வேறொருவரும் இல்லை. நீ எம்மைப்போல் நித்ய னாக இருந்து யாவராலும் வணங்கப்பெறுவாய். உனக்கு திவ்ய வடிவமும், சடை முடியும், சந்திரகலையும், நீலகண்டமும், மூன்று கண்களும், நான்கு தோள்களும், மான்மழுவும் யானையுரியும், நமது பூரண அருளும் அளித்தோம்,'' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

தேவர்களையும், வானவர்களையும் பார்த்து சிவபெருமான், ''தேவர்களே! யாம் இந்த நந்தீசனை சகல கணாதிபர்களுக்கும் அதிபனாகச் செய்தோம்! விநாயகன், முருகனைப்போல் இவனும் எமக்கு மகன், எல்லா தேவர்களாலும் இவன் பூஜிக்கத்தக்கவன். இனி சிவஞானத்தைப் போதிப்பதற்கு இவனே ஆசிரியன்; எமக்கு இவனே திருமேனி'', என்று வாய்மலர்ந்தருளினார்.

நந்தி பூஜிக்கப்பட்ட க்ஷேத்திரம் 'ஜாபேஸ் வரம்', (ஜபம் செய்யப்பட்ட இடம்) என்றும், இங்கு பலர் தவம் செய்யப்போகிறார்கள் என்றும் கூறினார். மேலும் நந்திநீராடிய புவனை நதி, 'நந்தீபவனை' என்ற பெயர் பெற்றது. புவனையின் வேண்டுகோளுக் கிணங்க நந்தியைத்தன் மகனாக ஏற்றதில், தனக்கு 'நந்திமாதா' என்ற பெயர் விளங்கியது. அதனால் ஆனந்தம் அடைந்து அவளது ஸ்தனங்களிலிருந்து, (மார்பகங்களிலிருந்து) பால் பெருக்கெடுத்து மூன்று வழியாகச் சென்றது. நந்திதேவர் ஒரு நாதஞ்செய்ய அதிலிருந்து ஒரு நதிபிரவகித்து 'நந்திநாதோத்ப வம்' என்ற பெயருடன் விளங்கலாயிற்று. அதைக் கண்ட தேவர்கள் அனைவரும் ''இவர் தேவர்களுக் கெல்லாம் தலைவராக இருக்க வேண்டும்'' என்று அபிஷேகம் செய்தார்கள். அந்த அபிஷேக நீர் ஒரு நதியின் உருவங்கொண்டு, 'சுவர்ணோதகம்' என்றும் 'ஜாம்பூநதநதி' என்றும் பெயர்பெற்று விளங்கியது.

அனைவரும் இன்புற்றிருக்கையில் நந்திதேவருக்குத் திருமணப்பேச்சு நடந்தது! பிதுர்த்தேவரது மனதில் உதித்த 'சுயசை' என்ற கன்னிகையை, நந்தீசருக்குத் திருமணம் பேசி முடித்தனர்.

பின்னர் அரம்பையர் ஆடவும், நாரதாதியர் பாடவும், தேவதுந்துபிமுழங்கவும், மலர் மாரிபொழியவும், நல்லதொரு முகூர்த்தத்தில், நந்திதேவருக்கும், சுயசைக்கும் வெகுவிமரிசனையாகத் திருமணம் செய்வித்தனர். உலகிலுள்ள அனைவரும் அந்தத் திருமணத்தைக் கண்டு மகிழ்ந்தனர்.

அதன் பின் நந்தியும், சுயசையும், சிவபெருமானை வணங்கினர். அப்போது சிவபெருமான் நந்தியை நோக்கி, ''நந்தி! நீயும் உன் மனைவியும் வேண்டும் வரங்களைக் கேளுங்கள்'' என்றார். நந்திதேவர் சிவபெருமானை வணங்கி, சுவாமி! தாங்கள் மகிழ்ச்சியுடன் இருப்பது உண்மையாயின் அடியேனுக்கு நீங்காத திடமான பக்தியும், என்தந்தை சிலாத முனிவருக்கு, திருவருளும் செய்தருள வேண்டும்'', என்றார். சிவபெருமானும், ''அவ்வாறே ஆகுக! நீயே அனைவருக்கும் சிறந்தவன்; யோகி; வில்லாளிகளில் மேன்மையுடையவன்; பிறரால் வெற்றிபெற முடியாதவன்; பூஜிக்கத்தக்கவர்களில் முதல்வன்; இப்படியாகவே நீ என்னுடன் வசிப்பாயாக! உன் தந்தையான சிலாதன், உன்னைப்போலவே அனைத்து நலன்களைப் பெற்று கணநாதரில் ஒருவனாவான்; உன் பிதுருக்கள் அனைவரும் என்னை அடைவார்கள். நினைத்த இடத்திற்குச் செல்லத்தக்கதும் பலமலர்களையுடைய சோலைகளையுடையதும், விரும்பியவற்றையெல்லாம் கொடுக்க வல்லதுமாகிய இந்தப் பர்வதத்தை (மலையை) நான் உனக்குத் தருகிறேன் என கொடுத்தருளினார். பார்வதி தேவியும் சுயசைக்கு நல்லவரங்கள் அருளி, ''நீ என்னுடனே வாழ்ந்து, முக்கண்களுடன் விளங்குவாயாக! ஞான முடையவளாய் என்னிடத்தும், உன் கணவனிடத்தும் பக்தி செய்து வாழ்வாயாக'' என்றாள்.

இந்த நந்தி ருத்திரகண உரையாடல்களை வாசித்தவர்கள், அஸ்வமேதயாகத்தை முடித்து அமிருதஸ்தானம் செய்தபயனை அடைந்து எல்லா பாவங்களையும் ஒழிப்பார்கள். சந்தியா நேரங்களில் இதை வாசித்தவர்கள் அந்தப் பிறவியில் செய்த பாவங்களை முழுவதையும் ஒழிப்பார்கள்.

அவரவர்கள் விடை பெற்றுத் தத்தம் இடம் சென்றனர். நந்திதேவரும் சிவபெருமானின் திருக்கோயில் வாசலில் சிவசந்நிதிக்கும் அந்த மலைக்கும் அதிகாரியாகப் பொற்பிரம்பும், கத்தியும் கரங்களில் ஏந்தி அதிகார நந்தியாக அமர்ந்தார்.

''இந்த நந்திதேவருடைய பிறப்பும், தவம் செய்தவகையும், பேறு பெற்றதும், மகுடாபிஷேகம் செய்து கொண்டதையும், விவாகம் செய்ததையும் வாசித்தவர்கள், நந்தீச சாருப்யமும், பிறர்சொல்லக் கேட்டவர்கள் நந்தீச சமனமும் அடைவார்கள்'' என்று சனத்குமார முனிவர், வியாசருக்குக்கூறியதாக சிவமகா புராணம் கூறுகிறது.

கோயில்களில் பிரதோஷம் நடக்கும்போது நந்தியின் தலையில் சிவபெருமான் நடனம் ஆடுவதாகவும், அவ்வேலையில் நந்திதேவரைத் தரிசனம் செய்வது மிகவும் விசேஷம் என்றும் புராணங்கள் கூறுகின்றன. கோயில்களில் பிரதோஷம் நடக்கும் போது நந்திக்கு நிவேதனம் செய்பவர்கள் வீட்டிற்கு ஆசாரத்துடன் அதை எடுத்துச்செல்லலாம். பச்சரிசியை நீரில் நனைத்து உலரவிட்டு, மிஷனில் குருணையாகப் பொடித்து, வெல்லப்பாகு ஏலக்காயுடன் குருணையைக் கொட்டிக்கிளறி எடுக்க வேண்டும். அதை உதிர்த்து விநியோகம் செய்வார்கள். இது மிகவிசேஷமானதாகும். மேலும் சர்க்கரைப்பொங்கல், தயிர்சாதம், ரவாகேசரி என்றும் செய்து எடுத்து வந்து நிவேதித்து, விநியோகிக்கலாம். இதைப் பிரசாதமாக விநியோகிப்பதைப்பெற்றுக் கொள்வதும் விசேஷமானது.

அன்றையதினம், மலர்மாலைகள், வில்வம், பால், தேன், இளநீர், பஞ்சாமிருதம், பழங்கள், பன்னீர், விபூதி, மஞ்சள்தூள், கற்பூரம், தயிர், ஊதுபத்தி போன்று சுவாமிக்குத் தேவையானவைகளைக் கொண்டுதரலாம். அன்று சிவன் கோயில்களில் நந்திக்கும் அபிஷே ஆராதனைகள் செய்வார்கள். அன்று கோயில் சென்று நந்தியுடன் சுவாமியை தரிசிப்பது மிகவும் விசேஷமாகும்.

திருவண்ணாமலையில் மாட்டுப் பொங்கலன்று காலையில் பெரிய நந்தி முதல், சுவாமிமுன் இருக்கும் நந்தி வரை அவரவர் பிரார்த்தனையின் பேரில் அறுவடை நெல்சரம், தேங்காய், எலுமிச்சம் பழம், வாழைப்பழம், ஆப்பிள், இளநீர், முறுக்கு அதிரசம், தண்டமாலைகள், இப்படி யாக மாலைகளைப் போட்டு அலங்கரித்திருப்பார்கள். அன்று திருவண்ணாமலையில் 'திருவூடல்' உற்சவம்' நடக்கும். அது நடக்கும் வீதிக்கு 'திருவூடல்' தெரு என்று தான் பெயர். மிகவிமரிசனையாக நடக்கும். திருவூடல் பார்க்க மறுஉடல் கிடையாது என்பர். நந்தியை வணங்குவோம், நந்தித் தேவரைப் போற்றுவோம்!

★★★

# ஆன்மாவின் விடுதலை

- தவத்திரு மயிலை சிவசக்தி அம்மையார்

ஓம்! ஓம்! ஓம்!
அருட்பெருஞ்ஜோதி! அருட்பெருஞ்ஜோதி!
தனிப்பெங் கருணை! அருட்பெருஞ்ஜோதி!

ஆன்மா மனிதப் பிறவியினில் மட்டும்தான் விடுதலைப்பெற்று, பேரின்ப ஆத்மனாக, ஆனந்தம் அனுபவிக்கமுடியும். மனிதப்பிறவி சிறந்த பிறவி. அதனால் ஆறாம் அறிவுபெற்ற ஆருயிராம் ஆத்மா, பேருயிராம் இறைவனை ஆர்வமுடன், அன்புடன் அறிந்து அடைய ஆர்வம் உள்ளவனாக இருக்கவேண்டும். ஆன்மா விடுதலை அடைவதையே இலட்சியமாக இருக்கவேண்டும்.

**ராகம் - கல்யாணி** **தாளம்: ஆதி**

**பல்லவி**

ஆன்மாவின் விடுதலையே மனித வாழ்வின்
இலட்சியம்
மனித வாழ்வின் இலட்சியமே ஆன்மாவின்
விடுதலை.

***சரணம் - 1***

ஆண்டவனைக் காணும் ஆன்மாவில்
லயிக்கணும்
அமைதியான இன்பம் காணணும் - இதுவே
இறுதி இலட்சியம் ஆகணும்
- ஆன்மா

***சரணம் - 2.***

எப்படிப் பட்டவன் என்று தன்னைத்தான் உணரணும்
தன் தவறை நினைத்து வருந்தி திருந்தியாகணும்
தீவிர முயற்சியும் உண்மையும் வேண்டும்.
- ஆன்மா

***சரணம் - 3.***

மனிதில் தைரியமும் நம்பிக்கையும் வேண்டும்
யோக சாதனையில் நல்ல வெற்றி காணணும்
உண்மை அறியும் ஆர்வம் தெளிவும் வேண்டும்
- ஆன்மா

***சரணம் - 4***

பரஞ்ஜோதிக் காணணும் பரமாத்மனை அடையணும்
உடலைநீத்து உணர்வைநீந்து உடையவனை
அடையணும்
ஆன்மபேரின்பம் நிலையாய் அடைந்திட வேண்டும்.
- ஆன்மா

இறைவனை சரணாகதியாகி ஆத்மாவை சமர்ப்பணம் செய்தால், ஆத்மா, பேரின்பமாம் விடுதலை பெறலாம். ஆன்மா விடுதலை பெறவேண்டுமானால் மனிதனுக்கு, பிரார்த்தனை, தியானம், தவம், யோகம் யாவுமே தேவை. இவைகளை, எப்படி, எந்தவிதம், எங்கேயிருந்து செய்வது என்பதை அனுபவ உணர்வாக இறைவனது திருவருளில் எழுதுகிறேன்.

இறைவனை சரணாகதியாக அம்மா அப்பா என்று உறவு சொல்லி உரிமையுடன் பிரார்த்தனை செய்திடவேண்டும். மனதினில் மாசுஇன்றி மனத் தூய்மையுடன் பிரார்த்தனை செய்திடணும், பிறவாமை வேண்டும் என்று பிரார்த்தனை செய்திடல் வேண்டும்.

இறைவனைப் பிரார்த்தனை செய்வதில் பலவித பாவங்கள் உள்ளன. மாத்ருபாவம், பித்ருபாவம், சகோதரசகோதரி பாவம், குழந்தை பாவம், நாயக நாயகி பாவம் மித்ரு பாவம் இப்படி பல பாவங்கள் உள்ளன. இதில் தாய் தந்தையராம் இறைவனுக்கு அடிக்கவும் அணைக்கவும், அதாவது, இன்பத்துன்பம் கொடுக்க உரிமை உண்டு எனச் சரணாகதியாகிப் பிரார்த்தனை செய்யவேண்டும். மாசு இல்லாதவனாக, மனத்தூய்மையுடன் பிரார்த்தனை செய்திடல் வேண்டும். பக்தியுடன் இறைவனின் நாமம் சொல்லி, சரணாகதியாகிப் பிரார்த்தனை செய்தால் அடைந்திடும் இன்பத்திற்கு எல்லை இல்லை. கல்லாதவரும் நல்ல அன்பு பண்புகளுடன் கூடிய பிரார்த்தனையினால் இறைவனது அன்பினை அருளைப் பெறலாம்.

பக்தியோகமே சிறந்த பிரார்த்தனையாகும். பக்தியுடன் கூடவே, பண்புகளாம் கர்மயோகம் சேர்ந்தால் ஞானம் பிறக்கும். பக்தியோகம், கர்மயோகம், ஞானயோகம் இவைகளின் பிரார்த்தனையால் இறைவனின் திருவடி இன்பமாம் பிரும்மஞானம் கிடைக்கும். பிறவியே வேண்டாம் என்று பிரார்த்தனை செய்தால் இறவாத பேரின்பநிலைக்கு, வழிநடத்திச்சென்று, பிறவா இறவா பேரின்பமும் அளிப்பார். ஆறறிவு படைத்த மனிதன், கேட்கத் தெரிந்தவன் சிந்திக்கத் தெரிந்தவன். பேசிடும் திறமை உள்ளவன். இவ்வளவு திறமை பெற்ற மனிதன், சிந்தனை, சொல், செயல், ஒன்றாயிருந்து உள்ளம் நெகிழ்ந்து உருகி உருகி உண்மையாகப் பிரார்த்தனை செய்திடல்வேண்டும். தாய் தந்தையாம் நம் இறைவனைப் பிரிந்து தனியானோம் என்ற உணர்வோடு, இறைவனைத் தேடி சரணாகதியாகி, உன் உரிமைக் குழந்தை உன்னைச் சேரவேண்டும். கருத்தினில் உன்நினைவும் உள்ளத்தின் உன்குணமும் வேண்டும் என்று பிரார்த்தனை செய்திடல்வேண்டும். நினைத்தாலே முடிக்கும் இறைவன், நாம் உருகி அழுது கேட்டால் நிச்சயம் எதையும் தருவான். தன்னையே நமக்குத் தந்திடுவான். தானே தவம் யோகம்செய்து தானாக்கி மகிழ்வான்.

இறைவன் அருகிலேயே உள்ளான் என்பதை உணராதவரையில், எங்கோ உள்ளான் என்று நினைத்து, மனிதன் சப்தமிட்டே பிரார்த்தனை செய்கின்றான். இறைவன் தன்னுள்ளே உள்ளான் என்பதை அனுபவமாக உணர்ந்தபின் சப்தமின்றி மோனமாக சதாநேரமும் பிரார்த்தனை செய்கின்றான். மானசீகம் வேகம் அல்லவா? மானசீகப் பிரார்த்தனையினால் நாம் ஆகாய விமானத்தில் பறப்பது போன்று வேகமாக இறைவனது திருவருளையும் திருவடியையும் பெறலாம் இது நிச்சயம். இது சத்தியம். அடியார்களின் அருளுரை அறிவுரைகளை நம்பி அதன்படி நடந்தால், பிரார்த்தனை செய்தால், இறைவனது திருவருளைப் பெறலாம்.

ஏட்டிலே படித்தவற்றைக் காற்றினில் பறக்க விடாமல் ஏற்றமுள்ள அறிவுரையை ஏற்று பிரார்த்தனை செய்திடணும். கற்ற கல்வியினால் மெத்த பலன் உண்டு. கற்றபடி பிரார்த்தனை செய்தால் கற்பக அருள் நிச்சயம் உண்டு. வெற்றி கிடைக்க வேண்டுமென்றால், பிரார்த்தனைகள் மூலமும் சோதனைகளை வென்றிடணும். அலைபாயும் மனதை அலைபாய விடாமல், சதாநேரமும் இறைவன் நாமம் சொல்லி பிரார்த்தனை செய்திடணும். இறைவனை நினைக்கும்போதும், துதிக்கும்போதும் நெகிழ்ந்து உருகி ஆனந்தக் கண்ணீர் பெருகப் பிரார்த்தனை செய்திடணும். பேச்சும், மூச்சும், உணவு, உடை, உடல், உயிர் உணர்வுகள் யாவுமே இறைவனது அருளில் என்றுணர்ந்து பிரார்த்தனை செய்திடணும். உண்ணும் போதும், உறங்கும்போதும் இறைவனை பிரார்த்தனை செய்திடணும். கண்ணிலும் கருத்தினிலும், எண்ணும் போதும், எழுதும்போதும் கூட இறைவன் நினைவாகப் பிரார்த்தனை செய்திடணும். காணும் பொருள்கள் யாதிலும் இறைவனது இயற்கையை ரசித்து ருசித்து பிரார்த்தனை செய்திடணும்.

இயற்கையாம், பஞ்சபூதங்களாம் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், பரமான்மா இவைகளுக்கு நாம் என்ன கைமாறு செய்கின்றோம் என்று பலனை எதிர்பாராத குணம் நமக்கும் வேண்டும் என்று பிரார்த்தனை செய்திடணும். உலகத் தாயின் குணம்கொண்டு தாயும்சேயும் ஒன்றாகி விடவேண்டும் என்று பிரார்த்தனை செய்திடணும். அயரா உழைப்பும் ஆண்டவன் நினைப்பும் தன்னை உணர்ந்து தாயை அடைந்திட உதவும். தாய் தந்தையின் பலனைப் பாராத குணமும், நம் குடும்பத்திலாவது நமக்கு வரவேண்டும். பலனைத் துறத்தல் துறவாகும்.

***ராகம்: பூபாளம்*** ***தாளம்: ஆதி***

***பல்லவி***

பலனைத் துறத்தல் துறவாகும்
பற்றற்று செயலாற்றல் துறவாகும்

***அனுபல்லவி***

ஆத்ம திருப்தியுடன் செயல்களைச் செய்யணும்
ஆத்ம திருப்தியே பராமத்மன் செயலாகும்
(பலனை)

***சரணம் - 1***

நல்லதைச் செய்தாலும் பலனைத் துறக்கணும்
கெடுதலை செய்யாமல் மறக்கணும் மறக்கணும்
நல்லவர் செய் நற்செயலை நினைக்கணும்
நினைக்கணும்
மற்றவரின் துர்செயலை மறக்கணும் மறக்கணும்
(பலனை)

***சரணம் -2***

இன்பம் அனுபவிக்க உலகினில் பிறக்கணும்
துன்பம் அனுபவிக்க உலகினில் பிறக்கணும்
உடலினில் நுழைந்தே இன்பத்துன்பம் உணரணும்
உடலினில் நுழைந்தே இறைவனையும் உணரணும்
(பலனை)

***சரணம் - 3***

அறம் பொருள் இன்பம் வீடு நான்கினையும்
நாளும் எந்தெந்த வேளையிலும்
செய்து அனுபவித்து பற்றற்று இருப்பதே
நித்தியத் துறவாகும் சத்தியத்துறவாகும்
(பலனை)

அன்பு உள்ளத்துடன் பிரார்த்தனை செய்து வந்தால், அன்பு உள்ளத்தில் பள்ளத்தில் வெள்ளம் போல் இறைவன் தங்கி வசிப்பார். இரக்கம் கொண்டு பிரார்த்தனை செய்வோரின் இதயக் கோயிலில் குடி புகுவார். தலையாய பேரின்பம் உண்டாகும். குறையாத அன்புடன் கூடிய பிரார்த்தனையால் நிறைவான பேரின்பமே. கோதில்லா குணத்துடன் கூடிய பிரார்த்தனையினால் கோடிக்கோடிப் பேரின்பமே. கணக்கில்லாத இறைவன், அன்பாம், மாசில்லாத பேரின்பமே! கணக்கில்லாத சூரிய ஒளியாம் அருட்ஜோதிப் பேரின்பமே! பலனைப்பாராத ஆத்ம திருப்தியாம் சரணாகதியாம் பிரார்த்தனையால் திருவடிப் பேரின்பமே. உடலின் தூய்மையும் மனதின் தூய்மையும் நமது மனம்ஒன்றிப் பிரார்த்தனை செய்திட உதவும். நல்லொழுக்கம், நல்ல எண்ணங்களுடன் கூடிய பிரார்த்தனைகள் எளிதில் நிறைவேறும். உள்ளும் புறமும் ஒன்றாகிப் பிரார்த்தனை செய்திடல் வேண்டும். இறைவனை சதாநேரமும் மறவாதிருத்தலே சிறந்த பிரார்த்தனை ஆகும்.

எல்லா உயிர்களும் இன்புற்று வாழவேண்டும் என்று பிரார்த்தனை செய்திடணும். துன்பம் கொடுப்பவர்களும் நிந்திப்பவர்களும் கூட நன்றாக இருக்க வேண்டும். திருந்தவேண்டும் என்று பிரார்த்தனை செய்யவேண்டும். புரியாமல் பழிப்பவர்களை, தீமை செய்பவர்களை மன்னித்துவிடுங்கள் என்று இறைவனிடம் பிரார்த்தனை செய்திடல் வேண்டும். அவர்களையும் நல்லவர்களாக்கிவிடுங்கள் என்று இறைவனிடம் பிரார்த்தனை செய்திடணும்.

★★★

# பார்க்கும் கண்ணில் பரமன்

- டாக்டர் சிவப்பிரியா, தில்லிப் பல்கலைக்கழகம்

ஒரு இடத்தில் "GOD IS NO WHERE' என்று எழுதியிருந்தது. அதைப் பார்த்த நாஸ்திகன் ஒருவன் GOD IS NO WHERE என்று படித்துவிட்டு, கடவுள் எங்குமே இல்லை என்று கூறினான். அதே வார்த்தையைப் பார்த்த ஆஸ்திகன் ஒருவன் GOD IS NOW HERE என்று படித்து, கடவுள் இங்கு உள்ளார் என்று புன்னகை புரிந்தான். நாஸ்திகன் நெஞ்சில் கடவுள் இல்லையாதலால் அவன் பார்த்த சொல்லிலும் கடவுள் தெரியவில்லை. ஆஸ்திகன் நெஞ்சில் கடவுள் இருந்ததால் அவன் கண்ட சொல்லிலும் கடவுள் தெரிந்தான்.

சிவலிங்கத்தைப் பார்க்கும்போதுகூட கடவுள் காட்சி தோன்றாமல் எண்ணையாடும் செக்கையும் மாவு அரைக்கும் ஆட்டு உரலையும் காண்பவர்கள் உண்டு. சிவலிங்கத்திலே மட்டுமல்ல வேப்பம் பழம், திராட்சைப்பழம் போன்ற பழங்களில்கூட சிவலிங்கத்தைக் காண்பவர்கள் உண்டு. இவ்வாறு கடவுளின் வடிவத்திலே கூட சிலர் கடவுளைக் காண்பதில்லை. அடியார்களோ காணும் பொருட்கள் எல்லாவற்றிலும் கடவுளைக் காண்கின்றனர். பார்க்கும் பொருட்களில் எல்லாம் பரமனைக் கண்ட அடியார்கள் மிகப்பலர் ஆவார்.

வரகுணபாண்டியன் என்பவன் பழங்கால மன்னன். இமயத்தில் மீன் சின்னத்தைப் பொறித்து வைத்து தமிழகத்தின் புகழை இமயம் வரை பரப்பிய பேரரசன். இம்மன்னன் ஓங்கிய சிவபக்தன். பார்க்கும் பொருட்களில் எல்லாம் பரமனைக் கண்டவன். கேட்கும் ஒலிகளில் எல்லாம் சிவகானம் கேட்டவன். உதிர்ந்து கிடந்த வேப்பங்கனிகளைக் கண்டு அவை சிவலிங்கம் போன்று இருப்பதால் கனிகளை உதிர்த்த வேப்ப மரத்திற்கு விதானம் அமைத்தான். ஓடும் நரிகள் ஊளையிட்டு சென்றதைக் கேட்டு சிவன் புகழ் பாடுகின்றன என்று ஆடைகளை அவற்றுக்கு வழங்கினான். குட்டையில் தவளைகள் அரற்றிய அரற்றலைக் கேட்டு அவை சிவனை வாழ்த்துகின்றன என்று பொன்னும் காசும் கலந்து தூவினான்.

கோயிலின் வாயிலில் நாய் மலம் கழித்துச் சென்றபோது கோயிற்பணி செய்வது பெரும் பாக்கியம் என்று அம்மலத்தைத் தானே அப்புறப்படுத்தித் தூய்மைப்படுத்தினான். கோயிற் முற்றத்தில் மண்டையோடு ஒன்று விழுந்து கிடந்தது. இம்மண்டையோடு இங்கு இருப்பதற்கு என்ன புண்ணியம் செய்ததோ என்று பாராட்டிப் பலமுறை வணங்கி, தனக்கும் இத்தகைய பேறு கிடைக்கவேண்டும் என்று மீண்டும் மீண்டும் தொழுதான். காவலாளிகள் கள்வன் என்று ஒருவனைக் கொண்டு வந்தபோது அவன் மேனியிலே திருநீற்றைக் கண்டு அவனை விடுவித்தான்.

திருமணம் நடந்தபோது வந்த மனைவி மிக்க அழகும் உயர்ந்த குணங்களும் உடையவளாய் இருத்தல் கண்டு மனம் விரும்பும் உயர்ந்தன எல்லாம் இறைவனுக்கு அளித்தலே சிறப்பு என தேவியையும் இறைவனுக்கே அளித்து விட்டாள்.

இத்தகைய மிகப்பெரிய அன்பில் சிறந்த தொண்டின் காரணமாக, சிவலோகக் காட்சியை மதுரையிலேயே காணும் பேறு பெற்றவன் இம்மன்னன். இவ்வரகுண பாண்டியனின் ஓங்கிய பக்திச் சிறப்பையும் இமயத்தில் மீன் பொறித்து மதுரையின் புகழ் பரப்பிய பெருமையையும், மதுரையிலே சிவலோகம் தோன்றியதையும்.


'சிற்றம்பலம் புகழும் மயல் ஓங்கு
இருங்களி யானை வரகுணன் வெற்பில் வைத்த
கயல்'

'வரகுணனாம் தென்னவன் ஏத்தும் சிற்றம்பலத்தான்'

'அப்பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்குவித்த
அப்பு ஆர் சடை அப்பன்'

என்று போற்றுகின்றார் மாணிக்கவாசகர். இவ்வரகுண பாண்டியனின் தொண்டின் பெருமையெல்லாம் பாராட்டிப் பெரிய அன்பின் வரகுண தேவர் என்று சிறப்பிக்கின்றார் பட்டினத்து அடிகள்.

'வெள்ளை நீறு மெய்யில் கண்டு
கள்ளன் கையில் கட்டு அவிழ்ப்பித்தும்
ஓடும் பல் நரி ஊளை கேட்டு அரனை
பாடின என்று பல்படாம் அளித்தும்
குவளைப் புனலில் தவளை அரற்ற
ஈசன் தன்னை ஏத்தின என்று
காசும் பொன்னும் கலந்து தூவியும்''
மருத வட்டத்து ஒரு தனிக் கிடந்த
தலையைக் கண்டு தலையுற வணங்கி



உம்மைப் போல எம் இத்தலையும்
கிடத்தல் வேண்டும் என்று அடுத்து அடுத்து இரந்தும்
கோயில் முற்றத்து மீமிசைக் கிடப்ப
வாய்த்தது என்று நாய் கட்டம் எடுத்தும்
காம்பு அவிழ்ந்து உதிர்ந்த கனி உரு கண்டு
வேம்புகட்கு எல்லாம் விதானம் அமைத்தும்
விரும்பின கொடுக்கை பரம்பரற்கு என்று
புரிகுழல் தேவியைப் பரிவுடன் அளித்த
பெரிய அன்பில் வரகுணதேவர்'

என்று வரகுண பாண்டியனின் தொண்டை விவரிக்கின்றார் பட்டினத்துப் பிள்ளை. 'திருவிளையாடல் புராணங்களிலும் வரகுணனின் வரலாறு கூறப்பட்டு அவன் மதுரையில் சிவலோகம் கண்ட மகிமை சிறப்பிக்கப்படுகின்றது.

இறைவன் மாணிக்கவாசகரிடம் பெண்ணின் கண்ணைப் பாடுமாறு கூறினான். கண்ணிலே மாணிக்கவாசகர் என்ன கண்டார்? இறைவியின் கண்ணிலே கூடமானையும், மீனையும், வேலையும், வாளையும், மலரையும் வில்லையும்தான் காண்பார்கள் புலவர்கள். ஆனால் மாணிக்கவாசகரோ பெண்ணின் கண்ணிலே கூட முற்றிலும் இறைவனையும் இறைமையையும் தான் கண்டார்.

ஈசற்கு யான் வைத்த அன்பின் அகன்று
அவன் வாங்கிய என் பாசத்தின் கார் என்று
அவன் தில்லை இன்னொளி போன்று
அவன் தோள் பூசத்திருநீறு என வெளுத்து
ஆங்கு அவன் பூங்கழல் யாம் பேசத்
திருவார்த்தையின் பெருநீளம் பெருங்கண்களே

என்ற திருக்கோவையார்ப் பாடலில் பெண்களின் கண்கள் சிவபக்தியைப் போன்று அகலமானவை, சிவன் நீக்கிய அஞ்ஞான ஆணவ இருளைப் போன்று கருமையானவை, பரமனின் தில்லையம்பலம் போன்று ஒளிபொருந்தியவை. ஈசன் பூசும் திருநீற்றினைப் போன்று வெளுத்தவை. 'ஈசனின் அடியார்கள் அவன் திருவடிப் புகழைப்பாடும் புகழ்மாலையைப் போன்று நீண்டவை என்று கூறினார் மாணிக்கவாசகர். இவ்வாறு மூச்சுக்கு மூச்சு பேச்சுக்கு பேச்சு கண்களிலும் ஈசனைத்தான் கண்டார் மாணிக்கவாசகர். உலகத்தின் எந்தவிதமான பொருளும் கண்ணில் தெரியவில்லை. கடவுளின் கண்களிலும் கடவுளைக் காண்பதில்லை புலவர்கள், மற்றவர்கள் கண்ணிலும் கடவுளைக் கண்டார் மாணிக்கவாசகர்.

உலகம் எங்கும் வலை போட்டுத் தேடினாலும் ஒப்புவமை கூறமுடியாத உயர்ந்த பாடலாக விளங்குகின்றது இந்த திருக்கோவயார்த் திருப்பாடல். கண்ணில் மட்டுமா கடவுளைக் கண்டார் மாணிக்கவாசகர்? அவர் பார்த்த பொருட்கள் எல்லாவற்றிலும் அவருக்குப் பரமன்தான் தெரிந்தான். மாணிக்கவாகர் திருவண்ணாமலைக்குச் சென்றபோது அங்கு தனித்து இருந்த இறைவனையும் இறைவியையும் ஒன்று சேர்த்தார். இறைவியோடு இசைந்த இறைவனை வணங்கிச் சென்ற மாணிக்கவாசகர் ஒரு மடுவினைக் கண்டார். செந்தாமரை மலர்களையும் நீலக்குவளை மலர்களையும் கொண்டிருந்த அந்த மடுவானது இறைவியோடு சேர்ந்த இறைவனாகக் காட்சி அளித்தது.

'பைங்குவளைக் கார் மலரால் செங்கமலப்
பைம் போதால்
...... எங்கள் பிராட்டியும் எம் கோனும் போன்று
இசைந்த பொங்குமடு'

என்று மடுவிலே மகாதேவனைக் கண்டார் மாணிக்கவாசகர். மடுவிலே இறைவனைக் கண்ட மாணிக்கவாசகர் மழையிலே இறைவனைக் கண்ட அருமையை

'முன்னிக்கடலைச் சுருக்கி எழுந்து உடையாள் என்னத் திகழ்ந்து' என்று தொடங்கும் திருவெம்பாவைப் பாடல் எடுத்துக்காட்டுகிறது. இவ்வாறு இயற்கையில் இறைவனைக் கண்டார் மாணிக்கவாசகர். இறைவன் படைத்த இயற்கையின் அழகையெல்லாம் வியந்து பாடினார் திருஞானசம்பந்தர். தலம் தோறும் யாத்திரை செய்து தலத்தின் பெருமையெல்லாம் போற்றிப்பாடி நாட்டுப்பற்று, மொழிபற்று, தெய்வப்பற்று என யாவற்றையும் வளர்த்து இசை, மொழி, கலை, பண்பாடு யாவும் அழியாமல் இன்றளவும் உயிர் வாழ்ச் செய்தவர்கள் இப்பெரியோர்கள். இச்சான்றோர்களின் தொண்டு இல்லையேல் இன்று தமிழகத்தில் தமிழ் மொழியையோ, தமிழர் பண்பாட்டையோ, கலைகளையோ காண முடியாது என்றுதான் கூறவேண்டும்.

# முருகா அருள்வாய்

– தத்துவக் கவிஞர் முருகுவண்ணன்

1. எனதூழ் வினையோ? விதிமற்றெதுவோ?
எனதுள்ளுணர்வில் 'முருகா அருள்வாய்''
எனநற் கவிதை செயென்றோ தியதே..
எனக்கின்றருள்வாய் முருகா! தமிழே!

2. 'முருகா!'' முருகா!'' எனவே மொழிந்திங்(கு)
இருபோ துமுனைத் தொழும்என் றனக்கே
அருளும் ஒருநாள் வருமோ அறியேன்
திருவே! தணிகைச் சிவச்செம் பொருளே!

3. முருகா எனும் முத்தமிழ் மந்திரச் சொல்
ஒருகா லுமொழிந் துருகாப் பிழையேன்
இருகா லுமொழிந் தினியா னுயவே
முருகா அருள்செய் உயிர்மெய் முதலே!

4. தணிகை மலைமேல் இருதை யலராய்
அணிசெய் அருள் அன் பினையே முருகா!
பிணியாம் பிறவித் தொடரைத் துணிப்பாய்
மணி, மந் திர, தந் திர, ஔ டதமே!

5. மூவா முருகா! முடிவில் முதலே!
ஓவாதுனடி தொழுதுள் பதித்தேன்;
கா! வா! முருகா! கவிதைக் கருளும்
தேவா! தணிகைத் திருவே! குருவே.

6. இனிமேல், பிறவா திறவா திருக்க
இனி நம் பிடவே றெவர்என் றனக்கே?
இனியுன் திருவுள்ளமெதோ அறியேன்
கனிந்தாள் முருகா! கடவுட் சுடரே!

7. இருகாலு மெனக் கிடர் செய் தழிக்கும்
பெருங்கா மமொடு பெருங்கேடுவிளை
அருகா சினமும் அளவில் மயலும்
ஒருவும் படிசெய் முருகா! உயவே!

8. சுரக்கச் செயின், பா தொடுக்கும் எனிரு
கரத்தில் பொருளைக் கனிந்தே அருளாய்:
இரப்பார்க் கிசைந்தே அளிப்பேன்: உனிடம்
இரப்பேன் எனக்கு முருகா அருளே!

9. புலனைந் தழிக்கும் பசியால் பொழுதும்
வலம்வந் துழல்வார்க் கமுதம் வழங்கும்
கலமாய்க் கவிதை புனையென் கரங்கள்
இலங்கற் கியற்றாய், முருகா! அனையே!

10. உடையாய் அனைத்தும் அதனால் உணவும்
உடையும் எனக்கும் உதவும் முருகா!
உடையில் லவர்க் கோர் உடைநல் கிடவே
கொடையாய் உடைகள் கொடுப்பாய் அறனே!

11. 'உயிர் அன்' பெனும் ஒண்டமிழர், பிறிதின்
உயிரைக் கொலைசெய் துணல்யா தறமோ?
உயிர்மெய் ஒருசேர் இறையே! உளமன்
உயிர்வாழ் வகைசெய் முருகா! உலகே!

12. கொலலும் களவும் களருந்தலும், பொய்
சொலலும் குருவைப் பழித்துச் சொலலும்
உலகோர் நினைவிட் டொழிதற் கருளாய்
நலஞ்செய் முருகா! தமிழ்நா டகனே!

13. பகைமை கொடுமைவிளை, போர் பரவும்
வகைசெய் கொடியோர் வழக்கென் றொழிப்பாய்?
மிகையாய் அடியார்க் கருள்செய் யவிழை
தகைசால் தமிழ்ச்சேய் முருகா! அருளே!

14. வயங்கும் உயிர்மொய்த் தமிழ்மாந் தரினி
இயங்கும் மனுயிர் எதையும் கொலும்தீச்
செயலைத் தவிர்த்தெவ் வுயிர்க்கன் புசெயும்
செயலே செயலாய் முருகா! அருளே!



15. தமிழ் மண் ணிலினும் தமிழ்மன் பதையோர்
தமிழ் ஆய்ந் துணர்ந்தோர், தமிழிற் சிறந்தோர்
அமிழ்தாய்ப் பிறிதூன் அருந்தல் தகுமோ?
தமிழ்த்தாய் முருகா! தடுத்தாண் டருளே!

16. இளமை குலவும் உலகின் எழிலும்
வளர்மெய் உயிர்ப்பும் வடிவும் குலைதற்(கு)
உளம்கொண் டழிப்பார் செயலென் றொழிப்பாய்?
தளரா தருள்செய் முருகா! தமிழே!

17. அன்பால் எனையீன் றவர்க்கும் அவரால்
என்றன் உடன்வந் துபிறந் தவர்க்கும்
என்றன் துணைக்கும் நான்ஈன் றவர்க்கும்
அன்பே! முருகா! உயும் வாழ் வருளே!

18. முப்பால் மறையை முழுதும் பயிலற்(கு)
ஒப்பார் எனினும் ஒருநாள் ஒருபா
தப்பா தினிமேல் தமிழர் பயிலற்(கு)
அப்பா! முருகா! அருள்இன் றருளே!

19. கிளிமெய் அடைந்த பினரே, கிளர்ந்து
களிகொண்(டு) அருணகிரிமா கவி, நின்
அளியால், முருகா! 'அநுபூதி' செய்தான்
எளிதன்றிதெலாம்! நினருட் செயலே!

20. திருவாக்(கு) அருண கிரியின் செயுள்போல்
ஒருசெய் யுளும்செய் திறமொன்றுமிலேன்...
இதுபஃதிருபா புனைந்தேன்; இசைந்தேல்
முருகா எனுள் வாழ்ந் தருள்முத் தமிழே!

21. கவிநான் குபுனை கவிவாணரைப் போன்ம்
கவிதை படைத்துன் கழல் சேர்த்திடவே,
கவிதை மரபே! கவித்தாய் முருகா!
கவிதை படைத்தேன் கனிந்தேற் றருளே.

22. 'முருகா! அருள்வாய்!' எனும் நூலிதைமு
வொருமையுடன் ஓதியுணர்ந் திடுவார்க்(கு)
இருமை நலமும் வளமும் இசைந்தே
முருகன் அருள்வான் இதுமெய் மொழியே.

(முற்றிற்று)

★★★

# கந்தர் அனுபூதி

## - திருப்புகழ்மாமணி மு. அருணகிரி

### கந்தரனுபூதியில் இரட்டை கவிகளாக கருதப்படும் இருபாடல்கள்

*முதல் பாடல் :*

உதியா மதியா உணரா மறவா
விதிமால் அறியா விமலன் புதல்வா
அதிகா அநகா அபயா அமரா
பதிகாவல சூர பயங்கரனே

*சுருக்க உரை*

பிறப்பு இறப்பு, நினைப்பு மறப்பு இல்லாதவனும் பிரமன் மாலுக்கு எட்டாத சிவகுமாரனே, மேலோனே, பரிசுத்தனே! புகலிடமே! தேவருரைப் புரந்தவனே! சூரனுக்கு அச்சம் தருபவனே - என்பதாகும். இப்பாடலில் ஒரு விசேடம் என்னவெனில், கந்தரனுபூதி பாடல்கள் ஏனையவற்றில் விண்ணப்பமும், விளியும் அமைய பாடியிருப்பினும் இப்பாடலில் மட்டும் முழுவதும் விளியாகவே பாடியுள்ளதின் கருத்தை நோக்கின், இதற்கு அடுத்தபாடலிலே முழுவதும் விண்ணப்பமாகவே கூறி, நிறைவு செய்த விதத்தினை சிந்தித்தல் அவசியம்.

*அடுத்த பாடலைப் பார்ப்போம்:-*

''வடிவும் தனமும் மனமும் குணமும்
குடியும் குலமும் குடி போகியவா
அடியந்தமிலா அயில்வேல் அரசே
மிடியென்றொரு பாவி வெளிப்படினே''

*சுருக்க உரை*

வறுமை தோன்றின் வடிவு, தனம், மனம் குணம், குடி, குலம் எனும் ஆறும் நம்மை விட்டு அகலும் என்பதாகும். இப்பாடலில் விண்ணப்பிக்கப் போகும் தம் கருத்தை நன்றாகக் கவனத்திற்கு கொண்டுவரும் பொருட்டே, ஒரு முழுப்பாட்டையே விண்ணப்ப மாகவே அமைத்து பாடி உள்ளார் எனக் கொள்ளுதல் சிறப்பாகும். இப்பாடலில் மிகவும் துயரம் தரும் செய்தியை விண்ணப்பிக்கும் முன்பே, மேற் சொன்ன முதல் பாடலாகிய

''உதியா மரியா உணரா மறவா''

எனும் பாடலில் விளியாகக் கூறியதை உளக்கண்ணால் உணர்ந்து படித்து, இதில் உள்ள சுவையை உணரலாம்.

பொதுவாக, மக்கள் துயரம் தரும் செய்தியை முதலிலே கூறுவதற்கு முன்னம், ''ஐயோ! அப்பா! கடவுளே! இந்த அநியாயத்தை என்னவென்று சொல்வேன்? இது தெய்வத்துக்கே அடுக்குமா? என்றெல்லாம் முறையிட்ட பின்னரே, தமக்கு நேர்ந்த துன்பச் செய்தியை கூறுவது இயல்பு.

அது போன்றே உளது, மேற் கூறப்பட்ட பாடல்கள் இரண்டும்.

முதற்பாட்டில் வெறும் விளியாகவே கூறிவிட்டு அதற்கடுத்தப் பாடலிலேயே, மிடி எனும் பாவியைப் பற்றி முருகனிடம் விண்ணப்பித்ததாக பாடியுள்ளது, சிந்திக்கத்தக்கது.

அருணகிரியார் தாம் பாடிய திருப்புகழ் பாடல்களில் நமக்குக் கிடைத்த 1340 பாடல்களிலும், வெறும் விளியாகவே அமைத்து பாடியுள்ளது மிக மிகக்குறைவே. அதே போன்று, 51 பாடல்கள் அடங்கிய கந்தரனுபூதியிலும் ஒரே ஒரு இடத்தில் மட்டும் விளியாக பாடிவிட்டு, அடுத்தப் பாடலிலேயே வெறும் விண்ணப்பமாக பாடியுள்ளது ஒப்பிட்டு நோக்கற் பாலது. மிடி எனும் துன்பத்தினால் வெளிப்படும் இன்னலைப் பாடியது போன்று, கந்தர் அலங்காரத்திலும்,

முடியாப்பிறவிக்கடலில் புகார், முழுதும் கெடுக்கும்
மிடியாற்படியில் விதனப்படார் வெற்றி
வேல்பெருமாள்
அடியார்க்கு நல்லபெருமாள், அவுணர்குலமடங்கப்
பொடியாக்கிய பெருமாள் திருநாமம் புகல்பவரே''

எனவும், திருப்புகழில்,

''திமிரவுததியனைய நரக
ஜெனனமதனில் - விடுவாயேல்
செவிடு குருடு வடிவு குறைவு
சிறிதுமிடியும் - அணுகாதே
அமரர் வடிவும் அதிக குலமும்
அறிவு நிறையும் - வரவேநின்
அருளதருளி எனையுமனதோடு
அடிமை கொளவும் - வரவேணும்''

என்பதாக முதல் 4 அடிகளிலும் விண்ணப்பமாகவே கூறியுள்ளதையும் கவனித்தல் சிறப்பு.

மேலும் ஓர் பாடலைக் கவனிப்போம்.

கலையே பதறிக்கதறித் தலையூ
டலையே படுமா றதுவாய் விடவோ
கொலையே புரிவேடர் குலப்பிடிதோய்
மலையே மலை கூறிடு வாகையனே''

**பாடலின் சுருக்க உரை**

வேற்கடவுளே! நான் கலைகளைக்கற்று அச் சூழலில் அலைச்சல் படவேண்டுமா? வேண்டவே வேண்டாம் என்றபடி இப்பாடலில் கலையின் தன்மையையும் அதன் பயனையும் குறித்துப் பாடி யுள்ளதைக் கவனிப்போம்.

மனிதனுக்கு பெரும்பாலும் 3 காரணங்களால் செருக்குண்டாகும். பணத்தாலும், உடல்பலத்தாலும், கற்றகலையினாலும் ஏற்படும். செல்வம் ஒருவனிடத் தில் எப்போதும் நிலைத்து நிற்பதில்லை. அதனால் விளையும் செருக்கு பலகாலம் இருக்க நியாயமில்லை. உடல் பலத்தால் வரும் செருக்கு நாளடைவில் உடல் தளரும் போது குன்றிவிடும். மனித உடம்பு எப்போதும் பலத்தோடு இருப்பதில்லை. வயது முதிர, முதிர பலம் குன்றித் தளர்ச்சி உண்டாவது இயற்கை. ஆதலின் பலத்தினால் விளைந்த செருக்கு சிலகாலம் இருந்து குன்றிவிடும். ஆனால் கலையினால் உண் டாகும் செருக்கு அத்தகையதன்று. பணத்தைப் போல வும், உடல் பலத்தை போலவும் சிலகாலம் சென்றதும் குறைந்துபோய் விடும் என்று கல்வி மூலம் கிடைத்த செருக்கைச் சொல்ல முடியாது. ஒரு முறை கல்வியி னால், கலையில் தேர்ச்சி உண்டானால், அது ஆயுள் உள்ளவரை விட்டு நீங்காது. இப்பிறவிபோய் மறு பிறவி வந்தாலும் இந்தக் கல்வியின் பயன் தொடரும். இக்கருத்தினையே,

''ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவர்க்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து''

எனத் திருவள்ளுவரும் கூறியுள்ளார். செல்வமோ, உடல் பலமோ ஒருகாலத்தில் குன்றினபோதிலும், கற்ற கல்வி மட்டும் அவன் ஆயுள் உள்ள வரை பிரிந்து செல்லாது. அத்தகு கல்வி, பிறர்க்குப் போதிப்ப தால், மென்மேலும் பெருகுமே தவிர குன்றாது. மேலும் எக்காலத்தும், எவ்விடத்தும் யாவராலும் கொள்ளை போகாது. இதனால் பணச் செருக்கு, பலச்செருக்கு எனும் இரண்டையும் விட கல்விச்செருக்கு மிகவும் கொடுமையானதும் ஆற்றல் உள்ளதெனவும் தெரியப் படுகிறது. இக்கருத்தினை மனத்தில் கொண்ட மணி வாசகர், திருவாசகத்தில்

''கல்வி என்னும் பல்கடல் பிழைத்தும்''

என ஒரு பாடலிலும்,

''உற்றாரையான் வேண்டேன்
ஊர் வேண்டேன், பேர் வேண்டேன்
கற்றாரையான் வேண்டேன்
கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையும் கூத்தாவுன்
குரைகழலுக்கே
கற்றாவின் மனம் போலக் கசிந்துருக
வேண்டுவனே''

என மற்றோர் பாடலிலும் பாடியுள்ளார்.

இக் கருத்தை மனத்தில் கொண்டே அருண கிரியாரும் ''கலையினால் பதற்றமும் வீண் ஆரவார மும் தலைக்கனமும் - வரலாமோ''

எனும் கருத்தமைய பலபாடல்களில் பாடியுள்ளார்.

**அடுத்து ஒரு கந்தரனுபூதிப்பாடல்**

''மட்டூர் குழல் மங்கையர் மையல் வலைப்
பட்டுசல் படும் பரிசென் றொழிவேன்
தட்டூடற வேல் சயிலத் தெரியும்
நிட்டூர நிராகுல நிர்ப்பயனே''

**சுருக்க உரை**

கிரௌஞ்சத்தை அட்ட வேலனே! மங்கையர் மீதுள்ள என் மோகம் என்னை விட்டு என்று அக லும்? என்பதாகும் இப்பாடலில் முதல் இரண்டடிக் கும், பின் இரண்டடிக்கும் பொருத்தமாகப் பாடி யுள்ளதை கவனிக்கலாம். கிரௌஞ்சத்தின் மாயையை வேல் கொண்டு ஒழித்தனையே; மாதர் மீதுள்ள என் மோகமாயை ஒழித்தருள உன் திருவருள் என்று எனக்கு கிடைக்குமோ எனும் விதத்தில் அமைந்துள்ளது.

**விளக்க உரை :**

காமத்தினால் விசுவாமித்திரர் நெறி தவறினார். அதே சிற்றின்பத்தால் இராவணன் மதியிழந்தான். காம மயக்கத்தால் சூர்ப்பணகை லட்சுமணனை காதலித்த தின் விளைவே மூக்கறுக்கப்பட்டாள். மாதவியின் தொடர்பாலே கோவலன் முறையான இல்லற வாழ்க் கையை அனுபவிக்காது போனான். திரு நீலகண்டரும் இளமை மீதூற இன்பத்துறையில் எளியரானதால்,

இல்வாழ்க்கை இனிதே நடத்த இயலாது போயிற்று. வாழ்க்கையை உணர்ந்தோர் செல்ல வேண்டிய துறை களில், பதியிலார் மையல்வலை அவர்களைச் செல் லாமல் தடுத்து ஊசலாடச் செய்து விட்டது. இப்பாட லில் மட்டூர் குழல் மங்கையர் மையல் வலை எனக் குறிப்பிட்டது விலை மகளிர்களையே குறித்துப் பாடப் பட்டதாகக் கொள்ளவும்.

**இன்னுமோர் பாடல் :**

பேராசை எனும் பிணியிற் பிணிபட்
டோரா வினையேன் உழலத் தகுமோ?
வீரா முதுசூர் படவேல் எறியுஞ்
சூரா சுர லோக துரந்தரனே!

*பாடலின் சுருக்க உரை*

தேவர் உலகைப்புரந்தவனே! பேராசை என் னும் பிணியில் யான் துன்புறலாமோ?

நாம் இதுகாறும் உடம்பு உடம்பாகப் புகுந்து புறப்பட்டு இருக்கின்றோம். இந்த அலைச்சல் எப் போது தொடங்கியது என்பது நமக்கே தெரியாது. இதைக் குறித்து திருப்புகழில் ''திமிரவுததியனைய நரக ஜனன மதனில் விடுவாயேல்'' என முதலில் துவக்கத்திலேயே பாடியுள்ளார்.'' எழுகடல் மணலை அளவிடின் அதிகம் என திடர் பிறவி'' எனவும் கூறி யுள்ளார். ''மாதா உடல் சலித்தாள், வல்வினையேன் கால் சலித்தேன், வேதாவும் கை சலித்துவிட்டானே'' எனப் பட்டினத்தடிகளும் பாடியுள்ளார். இதை விட பெரிய அலைச்சல் வேறெதும் இருக்காது. இதனால் இப்பாடலில்'' உழலத்தகுமோ'' என்று மனம் சலித்து இறைவனிடம் குறைபட்டுக் கொள்கிறார்.

ஆசைகள் இரண்டு வகை. ஒன்று சிறிய ஆசை மற்றொன்று பெரிய ஆசை அல்லது பேராசை, ஒருவர் உணவு, பழம் பலகாரம் போன்றவைகளை சாப் பிட ஆசைப்படுவது சிறிய ஆசை. பணம் கொடுத்து வாங்கிச் சாப்பிட முடியும் அல்லது வேறு நண்பர்கள், உறவினர்கள் மூலமாகப் பெற்றும் பயனடையலாம்.

பேராசை அல்லது பெரிய ஆசை என்பது நம்மிடம் போதுமான பணவசதி இருந்தும் பிறருடைய பொருளை அபகரித்து நாம் அனுபவிக்க வேண்டும் அல்லது மற்றவர்கள் நம் எதிரில் பொருளை இழந்து வறுமையினால் கஷ்டப்பட வேண்டும் என்ற எண் ணமோ, ஆசையோ எழுந்தால் அது நியாயம் அற்றது எனக் கொள்ள வேண்டும்.

இதைத்தான் அனுபூதிப் பாடலில் ஓராவினை யேன் எனக் கூறியுள்ளார். நல்லது இன்னதென்பதை தெளியாத செயலாளனாகிய நான் என் அழுத்தமாகக் காண்பித்துள்ளார்.

பேராசையே பிறப்பீனும் வித்து ஆதலின் அவா ஒழியில் பிறப்பு ஒழியும் என உணர்க.

''அற்றவர் என்பார் அவா அற்றார்'',
''அவா இல்லார்க்கு இல்லாகும் துன்பம்''
''இனம் இடையறா தீண்டும் அவா .... கெடின்''

என்றெல்லாம் திருக்குறள் பாடல்கள் *(361, 365, 368, 369)* தெரிவிக்கின்றன.

சூரன் நீண்ட ஆயுளைக் கொண்டிருந்தான். ஆதலின் 'முது சூர்' என்றார். ஆசையும் அளவற்றதாத லின் முது சூருக்கு நிகராயிற்று.

ஆராய்ந்து நல்லது இது என்று தெளிந்துணர விடாது பேராசையானது நல்லறிவை மறைக்கும். அதனால் 'ஓரா வினையேன்' என்றார். ஓர்தல் ஆராய்ந்து தெளிதல் எனும் பொருள்படும்.

**மற்றுமோர் பாடல் :**

நாதா குமரா நமஎன் றரனார்
ஓதாய் என ஓதியதெப் பொருள்தான்
வேதா முதல் விண்ணவர் சூடுமலர்ப்
பாதா குறமின் பதசே கரனே -

*சுருக்க உரை*

வள்ளிதாசனே! நீ சிவபிரானுக்கு உபதேசித்த உபதேசம் யாதோ - அதை எனக்கு உபதேசித்தருளுக -

அருணகிரியார் மேற்சொன்ன ஆசையை அடி யேனுக்கும் உபதேசிக்க வேண்டுகோள் விடுகிறார், தாம் பாடிய திருப்புகழ் பாடல்கள் பலவற்றுள். அவ்விதம் கேட்ட வினாவுக்கு விடை பின் இரண்டடிகளில் குறிப்பாக உள்ளது. எவ்வாறெனில், வேதா முதல் விண்ணவர் சூடும் மலர்ப்பாதனாய் இருந்தும் - நீ வள்ளி நாயகியின் பதசேகரன் என்றாரே அதுதான் விடை. யான் எனது எனும் இரண்டு நிலையும் அற்று நின்ற காரணத்தால் முருகன் தானே வள்ளியை நாடி வரச்செய்தது. அதனால் குறமின் பதசேகரன் ஆனார். இதனால், தன்னை இழந்தால் தலைவனைக் காண லாம் என்பதே இதன் ரகசியப்பொருள்; இதுவே வள்ளி அனுஷ்டித்த சன்மார்க்க நெறி என அறியலாம்.

★★★

# பொய்கையாழ்வார் கண்ட திருமால்

- கூடல் குகசீலரூபன்

முன்னுரை:

ஆழ்வார்கள் பன்னிருவரும் பாமாலை தொடுத்துள்ளனர். அவர்களுள் திருமாலைப் பாடிய வர்கள் பதினோரு பேர். மதுரகவி ஆழ்வார் மட்டும் அடியாருள் தலைசிறந்தவராகிய நம்மாழ்வாரைப் பாடினார். ஆழ்வார்கள் பாடிய நான்காயிரம் பாடல் களும் திவ்வியமானவைகள் என்பதால் அவை 'நாலாயிரத் திவ்யப் பிரபந்தங்கள்' எனப்பட்டன. ஆழ்வார்களுடைய வரலாற்றினை இராமானுசர் காலத் தில் வாழ்ந்த கருடவாகன பண்டிதர் இயற்றிய திவ்ய சூரி சரிதம், பின்பழகிய பெருமாள் சீயர் எழுதிய ஆறாயிரப்படி குருபரம்பரை, பிரமதந்திர ஸ்வதந்திர சீயர் எழுதிய குருபரம்பரை முதலிய நூல்களால் அறியலாம். ஆழ்வார் என்ற சொல்லுக்கு மூழ்கியவர் என்று பொருள். அடியார்கள் திருமாலிடம் ஆழ்ந்து விடுவதால் ஆழ்வார்கள் எனப் பெயர் பெறுகின்ற னர். பன்னிரு ஆழ்வார்களுள் பொய்கை ஆழ்வார், பேயாழ்வார், பூதத்து ஆழ்வார் ஆகிய மூவரும் முதலாழ்வார்கள் எனப்படுவர். இவர்கள் காலத்தால் முற்பட்டவர்கள் என்பதால் முதலாழ்வார் எனப் பெயர் பெற்றனர்.

### பொய்கையாழ்வார்

எம்பெருமானின் பெருமைகளை எடுத்தியம்ப முதன்முதலில் அவதரித்தவர் பொய்கையாழ்வார். இவ்வாழ்வார் தாமாகவே அவதரித்தவர். காஞ்சிபுரத் தில் வேகவதி எனும் ஆற்றினருகேயுள்ள திரு வெஃகா என்னுமிடத்தில் தாமரைப் பொய்கையில் ஒரு தாமரை மலரில் ஐப்பசி மாதத்துத் திருவோண நட்சத்திரத்தன்று பொய்கையில் அவதரித்தால் பொய்கையாழ்வாரானார். இதை

'செய்ய துலா வோணத்திற் செகத்துதித்தான் வாழியே
திருக்கச்சி மாநகரம் செழிக்க வந்தோன் வாழியே
வையந் தகளி நூறும் வருந்துரைத்தான் வாழியே
வனச மலர்க் கருவதனில் வந்தமர்ந்தோன் வாழியே
வெய்ய கதிரோன் தன்னை விளக்கிட்டான் வாழியே'

எனக் குறிப்பிடுகிறார் அப்பிள்ளை.

பொய்கையாழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ் வார் ஆகிய மூவருடைய காலத்தையும் திருமழிசை யாழ்வாரின் காலத்தையும் சங்ககாலமாகக் கொள்ள லாம் என யாப்பெருங்கல உரைகாரர் குணசேகரரும் பேராசியரும் கூறுகின்றனர். இதுபோன்றே களவழி நாற்பது, கார் நாற்பது பாடிய பொய்கையாரும், பொய்கையாழ்வாரும் ஒருவரே என்கிறார் டாக்டர் மு.இராகவையங்கார். முதலாழ்வார்கள் மூவரும், திருமழிசையாழ்வாரும் தமது பாக்களின் ஈற்றடி யில் தமது பெயரைக் குறிப்பிடவில்லை. இது சங்க கால மரபாகும். எனவே இவர்களை முதற்சங்க காலத்தவர்களாகக் கொள்ளலாம்.

பொய்கையாழ்வாரால் அந்தாதியில் முதன் முதலில் இயற்றப்பட்ட 100 பாடல்களே பிற்காலத் தில் முதல் திருவந்தாதி என்று தொகுக்கப்பட்டது. இராமானுசர் இவரது பாடல்களை 'ஞானதீபம்' என்று போற்றுகின்றார். மொழிவிளக்கு ஏற்றி முகுந்தனைத் தொழ வித்திட்டவர் பொய்கையாழ் வார் எனவேதான் முதலியாண்டார் என்னும் அடிகள்


'கைதைசேர் பூம்பொழில் சூழ் கச்சிநகர் வந்துதித்த
பொய்கைப் பிரான் கவிஞர் போரேறு - வையத்து
அடியவர்கள் வாழ அருந்தமிழ் நூற்றந்தாதி
படி விளங்கச் செய்தான் பரிந்து'

என்று சிறப்பிக்கிறார்.

### பொய்கை ஆழ்வார் கண்ட திருமால்

திருமாலைத் தொழுது அவன் தாளினை அடையவேண்டும் என்றால் பிறவியானது நீங்க வேண்டும். பிறவிகள் தொடரத் தொடர துன்பமும் தொடர்ந்து கொண்டே வரும். நம்மை இடர்ப் படுத்தக்கூடிய இப்பிறவி என்னும் கடல் நீங்கவேண் டும் என்ற வைணவ தத்துவத்தின் அடிப்படைக் கொள்கையினைத் தன்னுடைய முதல் பாடலிலேயே தெளிவு படுத்துகிறார்.

துன்பக்கடலில் இருந்து கரையேறுவதற் காக இவ்வுலகத்தை வட்டிலாகவும், நெடிய கடலை நெய்யாகவும் வெம்மையான சூரியனை விளக்காக வும் கொண்டு ஒளிவிடுகின்ற சக்கரத்தை ஏந்திய திருமாலுக்கு சொல்மாலை தொடுக்கின்றார்.



இதனையே

'வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக - செய்ய
சுடராழி யான்அடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடர் ஆழி நீங்குகவே என்று' குறிப்பிடுகின்றார். 1

## அரியும் அரனும் ஒன்றே

திருமாலைப் போற்றவந்த பொய்கையாழ்வார் திருமாலும் சிவனும் ஒன்றே என்று கூறுகின்றார். கடவுளுக்குச் சிவன் திருமால் என இரண்டு பெயர்கள். காளையையும் கருடனையும் அவர் வாகனமாகவும் மலையையும் கடலையும் கோயிலாகவும் அழித்தலையும் காத்தலையும் அவரது தொழிலாகவும் திரிசூலத்தையும் சக்கரத்தையும் அவரது படையாகவும் நெருப்பையும் கருமையையும் அவரது நிறமாகவும் கொண்டு விளங்குகிறார் என்பதை

'அரன், நாரணன் நாமம்; ஆன்விடை , புள்ஊர்தி
உரைநூல் மறை; உறையும் கோயில் - வரை, நீர்;
கருமம் அழிப்பு; அளிப்பு; கையது வேல், நேமி;
உருவம் எரி, கார்மேனி ஒன்று' (5)

என்று பாடுகின்றார்.

உலகத்தைத் தாண்டியவனும், தாயாக வந்து பால் கொடுத்த பூதகியின் நச்சுப்பாலை ஊணாகக் குடித்தவனும் ஆகிய திருமாலின் திருவுருவத்தையும் திருப்பெயரையும் அல்லாத பிறவற்றை என் வாய் வாழ்த்தாது; என் கைகள் தொழா; என் கண்கள் காணமாட்டா; என் செவிகள் கேட்க மாட்டா என்று உறுதிபூணுகிறார்.

'வாய், அவனை அல்லது வாழ்த்தாது; கை, உலகம்
தாயவனை அல்லது தாம்தொழா; - பேய் முலைநஞ்சு
ஊணாக உண்டான் உருவொடு பேர் அல்லால்
காணாகண்; கேளாசெவி' (11)

என்று சொல்வதன்மூலம் திருமாலையே கதியாகக் கொண்டு போற்றும் பாங்கு இங்கு வியக்கத்தக்கது.

## திருமாலே முதல்வன்

எல்லாக் கடவுளருக்கும் திருமாலே முதல்வனாகத் திகழ்கின்ற பாங்கினை

'முதலாவார் மூவரே; அம்மூவர் உள்ளும்
முதலாவான் மூரிநீர் வண்ணன் - '

என்ற (15) பாடல் அடிகளால் அறியலாகிறது.

எல்லோருக்கும் முதன்மையானவர் மும்மூர்த்திகளே. அம்மூர்த்திகளுக்கும் திருமாலே முதலானவனாக விளங்குகின்றான். அத்தகைய முதன்மையான நல்லவனுடைய கருணையைத் தவிர மற்றவர்கள் செய்கின்ற அருளெல்லாம் குற்றுமுடையதே ஆகும் என்கிறார்.

திருமாலின் மார்பிலிருந்து திருமகளும் கொப்பூழில் இருந்து வேதத் தலைவன் பிரமனும் உடம்பிலிருந்து சிவபெருமானும் தோன்றிய செய்தியினை

'ஐய மலர்மகள்நின் ஆகத்தாள்; - செய்ய
மறையான் நின் உந்தியான்; மாமதிள் மூன்றுஎய்த' (28)

என்ற வரிகளால் வருணிக்கிறார். எனவே கடவுளர்க்களுக்கெல்லாம் முதன்மையானவன் திருமாலே என்பதை இதன்மூலம் உணர்த்துகிறார்.

இத்தகைய சிறப்புமிக்க இறைவனே பஞ்ச பூதங்களாகவும் காட்சியளிக்கிறான் என்பதை

'இறையும் நிலனும் இருவிசும்பும் காற்றும்,
அறைபுனலும் செந்தீயு மாவான் - பிறைமருப்பின்'

என்ற செய்யுளின் மூலம் காட்டுகிறார். *29*

**புலனடக்கம்**

ஐம்புலன்களையும் அடக்கி ஆள்வதன் மூலம் திருமாலைக் காணலாம்; அவனது சீரிய அடிகளைத் தொழலாம் என்பது பொய்கையாழ்வாரது கருத்து. கண்கொட்டாமல், இருள் போகப் பார்த்து, அடங்காத ஐம்புலனையும் அதன்வழி நுகரும் பொருளையும் அவை நச்சரிக்காமல் உடம்பினுள்ளே அவற்றை அணைத்துக் கட்டுகின்றவர், ஆயிரம் வாய்ப்பாம் பணையிலே பள்ளிகொள்ளும் கலங்காப் பெருநகரான வைகுந்தத்தை அடைவர் என்கிறார். இதையே,

'இமையாத கண்ணால் இருள்அகல நோக்கி,
அமையாப் பொறிபுலன்கள் ஐந்தும் - நமையாமல்
ஆகத்து அணைப்பார் அணைவரே, ஆயிரவாய்
நாகத் தணையான் நகர்' எனக் காட்டுகிறார். (32)

புலன்களை ஒருமுகப்படுத்தி அகத்துள்ளே திருமாலை வழிபடுவதே சிறந்த வழிபாடு என்றும் புறத்தே செய்யும் சடங்குகள் எதற்கு என்றும் நம்மிடம் வினா எழுப்புகின்றார் பொய்கையாழ்வார்.

'புத்தியால் சிந்தியாது ஓதிஉரு எண்ணும்
அந்தியால் ஆம்பயன் அங்கு என்'

என்பதன் வாயிலாக இக்கருத்து புலனாகிறது. *33*

பொற்சக்கரத்தைக் கையில் ஏந்தியிருக்கும் திருமாலையே சிந்திக்குமாறு தன்நெஞ்சை வேண்டுகிறார். ஏனென்றால் குன்றளவிற்குத் தான் குற்றம் செய்தால்கூட அவற்றை நல்லகுணமாகவே எடுத்து அருளக்கூடிய தன்மை படைத்தவன் எம் இறைவன் எனும் கருத்துபட

'குன்றனைய குற்றம் செயினும் குணம்கொள்ளும்
இன்றுமுதலாக என்நெஞ்சே! - என்றும்
புறன்உரையே ஆயினும் பொன்ஆழிக் கையான்
திறன்உரையே சிந்தித்து இரு (41)

என இயம்புகின்றார்.

இதே கருத்தினையே மாணிக்கவாசகப் பெருமானும் தம்முடைய திருவாசகத்தில்

'குன்றே அனைய குற்றங்கள் குணமாம் என்றே
நீ கொண்டால்
என்தான் கெட்டது இரங்கிடாய் எண்தோள்
முக்கண் எம்மானே'

என்று குறிப்பிடுகின்றார்.

ஐம்பொறிகளையும் பொய்கையாழ்வார் மதயானைக்கு ஒப்பிடுகின்றார். மதம்பொருந்திய யானையை எவ்வாறு கயிற்றைப் போட்டுச் சுருக்கி இழுத்து வீதிவழியே அலையவிடாமல் கட்டுவார்களோ அதுபோன்று நம்முடைய ஐம்பொறிகளையும் கட்டுவித்து செம்மைவழியே நிறுத்தி கூர்மையான உண்மை அறிவால் உணர்கின்றவர், அந்த நாளிலே ஆதிமூலமே என்று அழைத்த யானைக்கு அருள் சுரந்த திருமாலின் திருவடிகளைக் காண்பார்கள் என்ற கருத்தை

'வாரிசுருக்கி மதக்களிறு ஐந்தினையும்
சேரி திரியாமல் செந்நிறீஇ - கூரிய (47)

எனும் பாடல் அடிகளால் அறியலாம்.

'அரியபுல னடைந்தடக்கி யாய்மலர் கொண்டு,
ஆர்வம்
புரியப் ப ரிசினால் புல்கில்' - பெரியனாய்' (50)

என்பதன் மூலம் நம்முடைய அரியபுலன்களை அடக்கி ஆள்வதன்மூலம் திருமாலின் கமலப்பாதங்களை எளிதில் வணங்கலாம் எனக் கூறுகின்றார் பொய்கையாழ்வார்.

**வினை தீர்க்கும் வித்தகன்**

என் அருகிலே வந்து கொண்டிருக்கக்கூடிய வினையைக்கண்டு நான் அஞ்சுகின்றேன். அவ்

வாறு அஞ்சி அதிலிருந்து தப்பிப் பிழைக்க உன்னுடைய பொற்பாதங்களை அடைவதற்காக அழகிய பாமாலையைக் கொண்டு ''நாராயண நம'' என்கின்ற சொல்மாலை தொடுக்க உன்னை வணங்கிக் கற்றுக் கொண்டேன் எனப் பொருள்படும் திறத்தான்

'அயல்நின்ற வல்வினையை அஞ்சினேன்; அஞ்சி
உயநின் திருவடியே சேர்வான், - நயம் நின்ற
நன்மாலை கொண்டு, நமோநாராயணா என்னும்
சொன்மாலை கற்றேன் தொழுது' 57

எனப் பாடுகின்றார்.

நம்மை வந்துசேர்ந்தடைந்த வினைகள் மட்டுமன்றி நம்மை ஆட்கொண்ட நோய், நம்மைப் பிணித்த பாவம் இவற்றிலிருந்த மீண்டொழிய வேண்டும் என்றால் திருமாலைச் சரணடைவதைத் தவிர வேறு எந்த சிறந்த வழியும் இல்லை என்ற கூற்றினை

'அடைந்த அருவினையோ டல்லல் நோய் பாவம்
மிடைந்தவை மீண்டொழிய வேண்டில், -
நுடங்கிடையை
முன்னிலங்கை வைத்தான் முரணழிய,
முன்னொரு நாள்
தன்வில் அங்கை வைக்கான் சரண்' (59)

எனும் பாடலில் தெரிவிக்கின்றார்.

பொய்கையாழ்வார் நம்மிடம் ஒரு கேள்விக் கணையைத் தொடுக்கின்றார். பிறர்பொருளை விரும்பாமலும், கீழ்மக்களோடு நட்புக் கொள்ளாமலும், சிறந்த மனிதர்களோடு அல்லாது பிறரிடம் இணங்காமலும், திருமாலைத் தவிர வேறு தெய்வங்களைப் பாராட்டிப் பேசாமலும் தொழாமலும் இருந்தால் தீவினை எப்படி நம்மை வந்து சேரும் என்கிறார்.

'திருமாலை அல்லது தெய்வம் என்று ஏத்தேன்;
வருமாறு என் நம்மேல் வினை' 74

என்று பாடுவதன் மூலம் திருமாலின் மீது அவர் கொண்டுள்ள தூய பக்தியினைப் புலப்படுத்துவதோடு அவரது ஒழுக்கநெறியினையும் இத னால் அறிய முடிகின்றது. எனவே திருமாலைத் தொழ நினைக்கும் அன்பர்கள் பிறருடைய பொருளுக்கு ஆசைப்படாமலும், நல்லவர்களோடு சேர்ந்து நல்ல தையே நினைக்கும் சிந்தையினை உடையவர்களாகவும் இருத்தலே சிறப்பு என்பதை நமக்கு உணர்த்து கின்றார்.

கஜேந்திரன் அன்றைக்கு திருமாலே நின் தாளே துணை என அபயம் கேட்டபோது அவனுக்கு அருள்செய்த உயர்ந்த கருணையை நினைத்துத் தொழுதால் வினைகளுக்கு ஆட்படமாட்டார்கள். கொடிய நரகத்திற்குச் சென்று சேரமாட்டார்கள் என்ற கருத்தினை

'வினையா லடர்ப்பார் வெந்நரகில் சேரார்
தினையேனும் தீக்கதிக்குட் செல்லார்' (75)

என்கிறார் பொய்கையாழ்வார். திருமாலை மனமுருகித் துதிப்பவர்கள் எவ்வித தீய கதியினையும் அடையமாட்டார்கள் எனச் செப்புகின்றார்.

சிவன் வேறு திருமால் வேறு என்று எண்ண வேண்டியதில்லை. இரண்டும் ஒன்றே என எண்ணிப் போற்றுங்கள் எனக் கூறுகின்றார் பொய்கையாழ்வார். எம்முடைய இறைவன் விடைவாகனத்தில் ஏறுபவன்; கருடன்மீதும் ஏறிச் செலுத்துபவன்; திரிபுரங்களையும் எரித்தவன்; இரணியன் மார்பைப் பிளந்தவன்; திருநீறை அணிந்த மேனியன். குளிர்ந்த நீலநிறத்தினன்; ஒரு பக்கத்திலே உமை அம்மையை உடையவன்; திருமகளை மார்பில் ஏந்தியவன்; நீண்ட சடையை உடையவன், நெடிய கொண்டையும் கொண்டவன்; கங்கையை அணிந்தவன் நீண்ட திருவடியை உடையவன் என்று இருவரையும் ஒன்றுபடுத்திக்கூறி அத்தகைய இறைவன் நம்மையெல்லாம் காக்கும் வல்லமை படைத்தவன் என்ற கருத்தினை,

'ஏற்றான், புள்ஊர்ந்தான்; எயில் எரித்தான்,
மார்விடந்தான்
நீற்றான், நிழல்மணி வண்ணத்தான்; - கூற்றொருபால்
மங்கையான், பூமகளான்; வார்சடையான் ,
நீள்முடியான்;
கங்கையான், நீழ்கழலான்; காப்பு' (74)


என்னும் பாடலில் காட்டுகின்றார்.

முதலையின் வாயில் அகப்பட்ட யானையினைக் காப்பாற்றிய திருமாலைக் கைதொழுதால் துன்பம் எப்படி வரும்? அதற்கான வாய்ப்பே இல்லை என்பதை

'இடார் படுவார் எழுநெஞ்சே, வேழம்
தொடர்வான் கொடுமுதலை சூழ்ந்த - ..... (78)

என்ற வரிகளால் குறிப்பிடுகின்றார்.

நான் விரும்பினாலும் உன்னுடைய அடிகளையே விரும்பி ஏற்றுக்கொள்வேன்; பாடினா



லும் உன்னுடைய திருப்புகழையே பாடுவேன் என்ற செய்தியினை,

'நாடினும் நின்னடியே நாடுவன், நாடொறும்
பாடினும் நின் புகழே பாடுவன்' (88)

என்பதன் வாயிலாகக் காட்டுகிறார்.

திருமாலே வானாகவும் தீயாகவும் அலை கடலாகவும் தென்றலாகவும் தேனாகவும் பாலாகவும் இருப்பதை

'வானாகித் தீயாய் மறிகடலாய் மாருதமாய்,
தேனாகிப் பாலாம் திருமாலே, (92)

என்ற பாடல் அடிகளின்மூலம் எடுத்துரைக்கிறார். திருமால் எல்லா இடத்திலும் எல்லாப் பொருள்களிலும் நீக்கமற நிறைந்து இருக்கின்றார் என்பதை இச்செய்தி விளக்குகின்றது. எனவே எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருளை எண்ணித் தொழுதுவந்தால் தீவினைகள் நம்மை அணுகா; நோய் நொடிகள் நம்மைப் பிணியா; எவ்விதத் துன்பங்களும் நம்மை வந்து அடையா; என்பதே பொய்கையாழ்வார் நமக்குக் கொடுக்கின்ற உறுதிமொழியாக அமைகின்றது.


## நிறைவுரை

திருமாலைத் தன்னுடைய இனிய பாடல்களால் போற்றவந்த பொய்கையாழ்வார் அவனது பெருமைகளை எடுத்துரைப்பதோடு அவனை வணங்குகின்ற அடியார்களுக்கு அவன் எவ்வாறெல்லாம் அருள்பொழிகின்றான் என்பதையும் சுட்டுகின்றார். திருமாலைத் தவிர வேறு எந்த தெய்வத்தையும் என்னுடைய நாதொழாது என்று உறுதியிலிருந்தாலும் சிற்சில பாடல்களில் திருமாலும் சிவனும் ஒன்றே என்பதையும் கூறுகின்றார். இவரது பாடல்களில் திருமாலின் அவதாரச் செய்திகளைக் காணமுடிகிறது. புறச்சடங்குகளைக் காட்டிலும் உள்ளன்பு கொண்டு ஐம்புலன்களை அடக்கித் திருமாலை வழிபடுவதே சிறந்த வழிபாடு என்பதே பொய்கையாழ்வாரின் கொள்கையாக விளங்குகின்றது.

★★★

# உலகம் இங்கே சொர்க்கமாகும்

**- கவிஞர் சொ.பா. சொக்கலிங்கம்**



மாந்தரிலே பாரபட்சம் மகேசனுக்கு இல்லையெனில்,
மாந்தரெலாம் நல்லவராய் மாளும்வரை வாழவேண்டும்,
மாந்தரெலாம் ஆண்டவனின் மறுஉருவம் என்பதினால்
மாந்தரெலாம் கடவுளாகி, மனிதநேயம் பேணவேண்டும்,
மாந்தருக்குள் ஆத்மாவும், மகேசனும் ஒன்றென்றால்
மாந்தரெலாம் ஆத்மாவின் மனம் குளிர நடக்கவேண்டும்
மாந்தர்போல் பிறஜீவன் மகேசனின் இடமென்றால்,
மாந்தரெல்லாம் ஜீவன்களை மதித்துவாழக் கற்க வேண்டும். 1

அன்புருவம் இறைவனென்றால் அவன்மேல் ஏன் பயம்வேண்டும்?
அறவழியில் வாழ்வமைத்தால் அவனன்பும் கனியாதோ?
இன்பமொன்றே இறைவன்வழி; இடர்ப்படுதல் மாந்தர்வழி;
எல்லாம்தரும் இறைவன்வழி; இல்லாமையே மாந்தர்வழி;
நன்மைசெய்வார் நலிவதென்றும், நன்மைசெய்யார் பொலிவதென்றும்,
நட்டுவைத்தகர் மம்என்றால், நன்மைஒன்றே நிலைத்துநிற்கும்;
உண்மைகளும் பொய்மையாகிப் பொய்மைகளும் உண்மையானால்,
உருக்குலைந்த தர்மம்வெல்ல உன்மனத்தைப் போற்றவேண்டும்; 2

கண்டிப்பதும், தண்டிப்பதும் கடவுளரின் வேலையெனில்,
காலம்தொட்டு மாந்தரினம் காணாமல் மடிந்திருக்கும்;
நன்மைதீமை கண்டுவாழ, ஞானமதை நமக்களித்து
நானிலத்தில் ஆண்டவனும் நம்மனத்தில் மறைந்திருப்பான்
நன்மைகளைத் தொடர்ந்துசெய்தால், நல்வினைகள் நலம்பயக்கும்;
நன்மைதீமை மாறிச்செய்ய, நலிவும்மலிவும் மாறிவரும்;
உண்மைஇதை உணர்ந்துவிட்டால், உலகம்இங்கே சொர்க்கமாகும்;
உலகைவிட்டுச் சொர்க்கம்தேடும் ஒருவழியும் வேண்டாமே. 3

# தட்சிணாமூர்த்தி திருவருட்பா - விரிவுரை

பருத்தியூர் டாக்டர் K. சந்தானராமன், M.A., D.Litt.Ph.D.,

### 5. உல்லாச பரமகுரு

பொல்லாத பாவங்கள் கோடானு கோடியிப்
புவிமிசையிலோர் வடிவமாய்
புலையனேன் உனைமறந்தனுதினம் செய்துவரு
பொல்லாத வினை எண்ணிலேன்
அல்லாரு மலமாயை கருமங்கள் அணுகாத
அகள நிட்பிரபஞ்சமாம்
அகளங்க சுத்த நித்யானந்த அனுபவம்
அணுவளவும் வந்ததில்லை
நல்லார் முன் நணுகாத நமதூதர் கொண்டுபோய்
நரகிலே விடுவரென்று
நடுநடுங்கா நின்ற துள்ளம். உனை நம்பினேன்,
நம்பினேன் வடகயிலையாய்!
உல்லாச பரமகுருநாதனே! ஆலடியில்
உறைகின்ற பரதெய்வமே!
ஒன்றாகி ஆனந்த உருவாகி என் உயிர்க்கு
உயிரான பரமசிவமே!

சிவபெருமானின் போக மூர்த்தமே தட்சிணா மூர்த்தி வடிவம், குருநாதர் அனைவரினும் மேம் பட்டவன். அதனால் அவனை, பரமகுருநாதன் என் றார். யோகமூர்த்தியாகி உபதேசக் கோலத்தில் இருப்ப வனை 'உல்லாச பரமகுருநாதன்' என்கிறார். யோகி எங்ஙனம் உல்லாசமானவனாய் இருக்கிறான்?

எப்போதும் மகிழ்ச்சியுடன் - துன்பம் கலவாத மகிழ்ச்சியுடன் இருப்பவன் ஈசன். ஆனந்தன் ஆகிய அவன் உல்லாசமாய் மகிழ்ச்சியாய் இருப்பவன். வீடு, கல்வி, தொழில் என்று அனைத்தையும் மறந்து மகிழ்ச்சியாய் மேற்கொள்ளும் பயணத்தை நாம் உல்லாசப் பயணம் என்கிறோம். தற்காலிகமாக அவற்றை மறக்கும் நமது மகிழ்ச்சியே உல்லாசம் என்றால் அவை எதுவும் அற்றவனான ஈசனுக்கு எவ்வளவு மகிழ்ச்சி - உல்லாசம் இருக்கும்?

அவன் யோகமூர்த்தியாய் இருக்கும்பொழு தும் யோகேஸ்வரியாக அம்பிகையை மனதில் நிறுத்திவைக்கிறான். 'எறிதரங்கம் உடுக்கும் ஒருவன் திருவுள்ளத்து அழகு ஒழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிர் ஓவியம்'' என்று அவன் இதயத்துள் இருக்கும் அம்பிகையை வருணிக்கிறார் குமரகுருபரர்.

'சிந்தையுள்ளே பந்திப்பவர் (சிவபெருமான்) பரமானந்தர்'' என்கிறார் அபிராமிபட்டர். மனத்துக் கினியவளை எழுதிப்பார்த்திருப்பதால் அவன் உல் லாசமூர்த்தியாகவே விளங்குகிறான்.

முருகனை 'உல்லாச நிராகுல யோகஇதன்'' என்கிறார் அருணகிரிநாதர்.

ஐயம் கேட்கும் மாணவர்களுக்கு உரியபடி உபதேசித்து விளக்கும் மகிழ்ச்சியே அலாதியானது. முதுமையில், படுத்தபடுக்கையாய் இருக்கும் நிலை யிலும் சிறந்த ஆசிரியர், நல்ல மாணவனைக் கண் டால் துள்ளியெழுந்து போதிக்கத் தொடங்கிவிடு வார். இதனை நாம் நடைமுறையில் காணலாம். கற் பிக்கும் இன்பம் அத்தகையது. எனவே, ஈசன் யோக மூர்த்தியான நிலையிலும் சான்றோர்களான சனகாதி யர்க்குக் கற்பித்த மகிழ்ச்சிப் பெருக்கினால் உல்லாச மானவன்.

இப்பாடலில் சுவாமிகள் உல்லாச பரம குருநாதனை அழைத்து, தமது பாவ வினைகள் குறித்து முறையிடுகிறார். ஆனால் அது அவர்தம் பாவமூட்டை பற்றியது அன்று. புண்ணியசீலராகிய சிவஞான சுவாமிகள் நம்பொருட்டு ஈசனிடம் முறையிடுகிறார்.

'நான் கோடிக்கணக்கான பாவங்களைச் செய்த வன். அவையனைத்தும் ஒரு வடிவம் பெற்றதுபோல் புலையனேன் பூமியில் தோன்றியுள்ளேன்.''

'உன்னைச் சிறிதும் நினைக்காமல், மேன் மேலும் ஒவ்வொரு நாளும் பாவவினைகளையே செய்துவருகிறேன். அதனை எண்ணி வருந்துவ தில்லை.''

'உலகியல் சேற்றிலிருந்து வெளிப்பட்டு, விடு வதற்கு அரியதாகிய மலமாயை, கருமங்கள் அனைத் தையும் விடுத்து, சிறிதும் களங்கமில்லாத தூய்மை யான நிலையான ஆனந்தம் எனக்குச் சிறிதும் வந்ததில்லை'' என்கிறார்.

'அகளங்க சுத்த நித்யானந்த அனுபவம்'' என் பது இப்புவியில் ஜீவன் முக்தர்களுக்கே கிடைக்கும். அது வல்லாது, இடையில் கிடைக்கும் இன்பங்கள் அனைத்தும் குறைபாடுள்ளவை. தூய்மையற்ற அநித்ய மான இன்பமே. அதனை, சுவாமிகளே அடுத்த பாட லில் விளக்குகிறார்கள்'.

'படகு தண்ணீரில் இருக்கலாம். அது தண்ணீ ரில்தான் இருக்கவேண்டும். ஆனால், தண்ணீர்

படகுக்குள் வந்துவிடக்கூடாது. அதுபோல் நாம் உலகத்தில்தான் இருக்கவேண்டும். ஆனால், உலகியல் ஆசாபாசங்கள் நம்முள் குடிகொள்ளாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.'' இது இராமகிருஷ்ண பரமஹம்சரின் அமுதமொழி.

அப்படி, உலகியல் ஆசாபாசங்கள் இல்லாமல் இருக்கும் நிலையே! நிஷ்ப்ரபஞ்ச நிலை. பிரபஞ்சம் - உலகு, நிஷ்பிரபஞ்சம் - உலகியல் நுழையாத நிலை. இந்த நிலை பெரிய மகான்களுக்கே வாய்க்கும்.

தண்டனை பெற்ற கைதியும் சிறையில் இருக்கிறான். கண்காணிப்பு அதிகாரியும் சிறையில் இருக்கிறார். ஆனால், கைதிக்குரிய தண்டனையும், கட்டுப்பாடுகளும் கண்காணிப்பு அதிகாரிக்குப் பொருந்தாது. சிறையில் இருந்தாலும் அதிகாரி சிறைவாசி அல்ல. அதுபோல் உலகியல் - ப்ரபஞ்சவிவகாரம் மகான்களைப் பாதிக்காது. இப்படி 'நிஷ்ப்ரபஞ்ச நிலைக்கு' எளிமையான விளக்கம் தந்தார் அமரர் சேங்காலிபுரம் அனந்தராம தீட்சிதர்.

ஈசன் நினைப்பும், அடியார் சேர்க்கையும் அந்த நிலையை அளிக்கும். அப்போதுதான் 'இன்பமே எந்நாளும்'' என்று அப்பர் பெருமான் சுட்டிக்காட்டிய நித்யானந்தம் வாய்க்கும்.

மக்கள் அழைக்கும் போதெல்லாம், ஆங்காங்கே ஓடிச்சென்று அவர்களுக்கு எப்போதும் தொண்டுசெய்து வந்தார் ஒரு பாதிரியார். எப்போதும் ஏதாவது தொண்டு செய்துகொண்டே இருப்பார். மக்களுடன் கலந்து பழகி அவர்களின் குறைகளைக் களைந்து வந்த அப்பாதிரியாரின் உள்ளம் மட்டும் - மனது மட்டும் இடைவிடாத கடவுள்நினைப்பில் திளைத்திருக்கும். இது எதுபோல் இருந்தது தெரியுமா? மலையின் அடிப்பாகத்தில் காடும் பனியும் நிறைந்து மறைந்திருந்தாலும் அம்மலையில் உயர்ந்த சிகரம் மட்டும் எப்போதும் சூரிய ஒளியில் மூழ்கியிருக்கும். அதுபோல்தான் அவரது உலகியல் விவகாரம். ஆங்கிலக் கவிஞர் ஆலிவர் கோல்ட்ஸ்மித் தனது 'டெஸர்டட், வில்லேஜ்' என்ற கவிதையில் மேற்கண்ட 'நிஷ்பரபஞ்ச' நிலையைக் குறிப்பிட்டுள்ளார்.

'பாவங்களின் விளைவு மரணபயம், எமபயம். எமதூதர்களை நினைத்தாலே உள்ளம் நடுங்குகிறது. பயங்கரத் தோற்றத்துடன் வரும் எமதூதர்கள் என்னைக் கொண்டுபோய் என்பாவத்துக்கு ஏற்ற நரகத்தில் விடுவார்கள். நான் செய்த பாவமோ கோடானுகோடி அல்லவா? அதற்கேற்ற நரகங்கள் அத்தனையும் காத்திருக்கின்றன.''

'எமதூதர் கொண்டுபோய் நரகிலே விடுவர் என்று நடுநடுங்க நின்றது எனதுள்ளம்''

சிவஞான தேசிகர் போன்ற மகான்களுக்கா இந்த நடுக்கம்? இல்லை, இல்லவே இல்லை. நம் போன்ற சராசரி மக்களுக்காகக் கூறப்படுபவை இவை.

காலனைக் காலால் உதைத்த தலத்தில் அபிராமியின் திருவடிகளைப் பற்றிக்கொண்ட அபிராமி பட்டரும் 'வினைவழியே அடுங்காலன், எனை நடுங்க அழைக்கும்பொழுது'' என்று நம் பொருட்டாக உரைக்கிறார்.

மேலும் அவர் 'வெம்பாவங்களே செய்து பாழ் நரகக் குழிக்கே அழுந்தும் கயவர்'' என்கிறார்.

நரகச் சேற்றில் பாம்பினும் கொடிய நச்சுப் பிராணி ஒன்று உண்டு. அதன் பெயர் 'ருரு.' சேற்றில் முழுவதும் புதையாமலும், மேலே வரஇயலாமலும், நாற்றத்தின் கொடுமை தாளாமலும் திண்டாடும் பாவிகளை ருரு கொத்திக்குதறி துடிதுடிக்கச் செய்திடும். எனவே, கொடிய 'ருரு' என்ற பிராணி உள்ள நரகத்தை 'ரௌரவம்' என்றனர். அதுபோன்று மொத்தம் இருபத்தெட்டு நரகங்கள் உள்ளன என்று புராணங்கள் உரைக்கின்றன. அவற்றை 'ரௌரவாதி நரகங்கள்' என்று கூறுவர். கொடிய பாவங்கள் செய்வோரில் சிலர் இவை அனைத்திலும் கூட மாறி மாறி வேதனையை அனுபவிக்க நேரிடலாம். சொர்க்க - நரகக் கொள்கையைப் பெரும்பாலான சமயங்கள் ஏற்றுக்கொண்டுள்ளன.

இதுபோன்ற செய்திகளைக் கேட்கும்பொழுது மனம் நடுங்குகிறது என்றால் நடைமுறை அனுபவம் எவ்வளவு கொடியதாக இருக்கும் என அஞ்சி மக்கள் நன்னெறியில் வாழவே முற்படுவர். சமுதாயத்தை நன்னெறிப்படுத்தவே முன்னோர்கள் இவற்றை உரைத்துள்ளனர்.

கொடிய எமதூதர்களிடமும் ஒரு நல்லியல்பு உண்டு. அவர்கள் எக்காரணத்தைக் கொண்டும் நல்லோர் முன் நணுகமாட்டார்கள்.

வழிபடு தெய்வத்தின் பரிவார தேவதைகள் அடியவரை மரியாதையுடன் அழைத்துச்சென்று நல்லுலகில் சேர்த்துவிடுவார்கள். ஆதலால் 'நல்லார் முன் நணுகாத யமதூதர்'' என்றார்.


குழையோர் காதில்உடைய சிவபெருமானின் கொய்மலர்ச் சேவடியை நினைப்பவர்க்கு ஏது எமபயம்?

'நமனை அஞ்சோம் நரகத்தில் இடர்ப்படோம் இன்பமே எந்நாளும்'' என்ற அப்பரின் பாடலுக்கு இணையான கருத்தை இங்கு சுவாமிகள் சற்றே வேறுபட்டமுறையில் கூறியுள்ளார்.

★★★

# மனிதரில் மனிதனைப் பார்

*- சிறுகதைச் சித்தர் ஏ.வி. இராஜகோபால்*




உதங்கர் ஒரு அந்தணர். வேத விற்பன்னர். பெரும்பாலும் பாலைவனத்தில் திரிபவர். ஆசையற்றவர். கண்ணபிரானிடம் அவர் ஒரு வரம் கேட்டார். ''பிரபுவே, எனக்கு எப்போதாவது தாகத்துக்குத் தண்ணீர் தேவைப்பட்டால் அது கிடைக்குமாறு செய்தால் போதும்.'' ஆண்டவனும் வரம் தந்தான்.

ஒருமுறை உதங்கருக்குத் தீவிர தாகம் எடுத்தது. தண்ணீர் எங்கும் கிடைக்காததால் தவித்துப் போனார். கண்ணன் கொடுத்த வரத்தை நினைத்துப் பார்த்தார். அப்போது அவர் எதிரில் ஒரு புலையன் வந்தான். அவன் உடலில் அழுக்குத் துணிகள். தோளில் ஒரு தோல் பை. அவன் உதங்கரைப் பார்த்து ''தண்ணீர் கிடைக்காமல் வாடுகிறீர்கள் போலிருக்கிறதே? இதோ என் தோல் பையில் தண்ணீர் இருக்கிறது. குடியுங்கள்.'' தோல் பையையும் ஒரு மூங்கில் குழாயையும் சொல்லிக் கொண்டே நீட்டினான்.


உதங்கர் அவனைப் பார்த்தார். அழுக்கு உடையுடன் பார்க்கவே அசிங்கமாக இருந்தான். போதாதற்கு தண்ணீர் இருப்பது தோல் பையில்! அதைக் குடிப்பதற்கோ மூங்கில் குழாய்! தன் தாகத்தை அடக்கிக் கொண்டு ''வேண்டாம்பா'' என்றார் வருத்தத்துடன். அவனும் போய்விட்டான்.


சிறிது தூரம் போனதும் உதங்கருக்கு மீண்டும் பெரும் தாகம் எடுத்தது. ''கண்ணா, எப்போதாவது தாகம் எடுத்தால் தண்ணீர் கிடைக்கச் செய்கிறேன் என்று வரமளித்தாயே? இப்படி வாட விடுகிறாயே?'' என்று முறையிட்டார்.

அப்போது கண்ணன் அவர் முன் தோன்றினான். ''உதங்கரே, உங்களுக்கு முதல் தடவையாக தாகம் எடுத்தபோதே, தேவேந்திரனிடம் அவர் உத்தமர். அவருக்கு அமிர்தம் எடுத்துப் போ'' என்றேன். அதற்கு அவன் ''மனிதர்களுக்கு அமிர்தம் அளித்து சாகா நிலை அளிக்க முடியாது. ஆயினும் நீங்கள் பணித்ததால் செய்கிறேன். ஆனால் நான் ஒரு புலையனாகத்தான் போவேன்' என்றான். நானும் 'நீர் ஒரு ஞானியாயிற்றே! மனிதரில் மனிதனைத் தான் பார்ப்பீர்' என்று நினைத்தேன். ஆனால் மனிதரில் புலையனைப் பார்த்து நீர் இப்படி என் நம்பிக்கையை வீணாக்கி விட்டீரே?'' என்றார் கண்ணன். ●




மயிலை அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் 17-7-2001 அன்று மாண்புமிகு இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசுவாமி அவர்கள் ''புத்தொளிப் பயிற்சி வகுப்பு''களைத் துவக்கி வைத்தார்கள். இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை இணை ஆணையாளர் (தலைமையிடம்) திருமிகு ப. தனபால் எம்.ஏ.பி.எல். அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். சென்னை இணை ஆணையாளர் திருமிகு இரா. சுப்பிரமணியன் பி.ஏ.பி.எல். அவர்களும், மயிலை அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் உதவி ஆணையாளர் - நிர்வாக அதிகாரி திருமிகு அ. சுப்பிரமணியன் எம்.ஏ., பி.எல். அவர்களும் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்கள்.





சென்னை இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் அலுவலகத்தில் 30-7-2001 அன்று மாண்புமிகு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்களின் தலைமையில் சீராய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அறநிலையத்துறையின் அரசுச் செயலாளர் திருமிகு பி.ஏ. இராமையா இ.ஆ.ப., அவர்களும், அறநிலையத்துறையின் சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு த. இரா. சீனிவாசன் இ.ஆ.ப. அவர்களும், கூடுதல் ஆணையாளர் திருமிகு எஸ். கனகையா பிஎஸ்சி., பிஎல்., இணை ஆணையாளர் (தலைமையிடம்) திருமிகு ப. தனபால் எம்.ஏ., பிஎல்., மற்றும் இந்துசமய அறநிலையத் துறையின் மண்டல இணை ஆணையாளர்கள், இணை ஆணையாளர் - செயல் அலுவலர்கள், துணை ஆணையாளர் - செயல் அலுவலர்களும் கலந்து கொண்டார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை – 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : ***பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,*** 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை – 600 014.